# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 05 புதன்கிழமை (18-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:143


## வெளிநாட்டு ஊடகவியலாளர் சம்மேளனம் கவலை

கொழும்பு,ஏப்.18

லண்டன் 'சண்டே ரைம்ஸ்' இதழின் அமெரிக்க ஊடகவியலாளர் மேரி கத்தரின் கொல்வின் வவுனியாவில் சுட்டுக் காயப்படுத்தப்பட்டமை தொடர்பாக இலங்கையில் உள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர் சம்மேளனம் தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டு ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயலாளர் தில்சிகா ஜெயமஹா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் போர் நடைபெறும் இடங்களில் ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் செய்தி சேகரிப்புத் தடையை நீக்கி ஏனைய போர் நடைபெறும் நாடுகளைப் போன்று ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக செய்தி சேகரிக்க வாய்ப்பு வழங்கப்பட்டால் இவ்வாறான நிகழ்வுகளை தவிர்க்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-20)

## புலிகளைச் சந்தித்துவிட்டு திரும்பியவேளை லண்டன் 'சண்டே ரைம்ஸ்' செய்தியாளர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயம்



கொழும்பு,ஏப்.18

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற லண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் செய்தியாளரான அமெரிக்கப் பிரஜையான மேரி கத்தரின் கொல்வின் (வயது 44) விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களைச் சந்தித்து செய்திகளைச் சேகரித்த பின்னர் -

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

உடனடியாக அனுராதபுரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர் ஹெலி மூலம் கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார்.

நெஞ்சு, தோள்மூட்டு, கண் ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்ட அவரின் உடல்நிலை ஆபத்துக் கட்டத்தைத் தாண்டிவிட்டதாகக் கொழும்பு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் அரசியல் நிலைமைகள் குறித்தும், சமாதான முயற்சிகள் குறித்தும் அறிவதற்காக லண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் செய்தியாளர் மேரி கத்தரின் கொல்வின் கடந்த மாதம் 27 ஆம் திகதி கொழும்பு வந்திருந்தார்.

லண்டனில் உள்ள இலங்கைக்கான தூதரகத்தின் சிபார்சுடன் அவர் இலங்கை வந்திருந்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை பேட்டி காண அவா விரும்பி தகவல் திணைக்களத்துடன் தொடர்புகொண்டார்.

அச்சமயம் அவர் கோல்பேஸ் ஹோட்டலில் தங்கியிருந்தார். அவருக்கு தகவல் திணைக்களத்தினால் செய்தியாளர்களுக்கான அடையாள

(12ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்முடன் ரணில் பேச்சு

கொழும்பு,ஏப்.18

நோர்வேக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வேயின் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ள ரணில் விக்கிரமசிங்க, இவ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் அன்னை பூபதி பிரசுரங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் 13 ஆவது நினைவு நாளை ஒட்டிய துண்டுப்பிரசுரங்கள் மானிப்பாய், நவாலி, தாவடி, கோப்பாய், நீர்வேலி ஆகிய பகுதிகளில் நேற்று விநியோகிக்கப்பட்டன.

# போர் ஓய்வு, தடை நீக்கம்-இரண்டுமே புலிகளின் முன் நிபந்தனைகள் அல்ல

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் "தமிழ் கார்டியன்" பத்திரிகைக்குப் பேட்டி



லண்டன்,ஏப்ரல்18

**சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் போருக்கு ஓய்வுகொடுக்க வேண்டும் என்பதும், விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதித்துள்ள தடையை ஸ்ரீலங்கா அரசாங்கம் நீக்கவேண்டும் என்பதும் விடுதலைப் புலிகள் விதித்துள்ள முன் நிபந்தனைகள் அல்ல.**

**பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நிலையான் அத்திவாரத்தை இடும் அவசியமான நடவடிக்கையாகவே இவற்றைப் பார்க்கவேண்டும்.**

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருந்து வெளிவரும் "தமிழ் கார்டியன்" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

**தமது இயக்கம் புதிய நிபந்தனைகளை விதித்து சமாதானப் பேச்சுக்களுக்கு வேண்டும் என்றே முட்டுக்கட்டை போடுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களையும் அவர் நிராகரித்துள்ளார்.**

அந்தப் பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருப்பதாவது:-

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னராக போருக்கு ஓய்வுகொடுக்க வேண்டும் என்பதும், புலிகள் இயக்கம் மீது விதித்துள்ள தடையை ஸ்ரீலங்கா அரசாங்கம் நீக்கவேண்டும் என்பதும் புதிய நிபந்தனைகள் அல்ல. இவற்றை நீண்டகாலமாகவே நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு

(11ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனின் தடைக்கு எதிராக புலிகள் வழக்குத் தொடருவர்

லண்டன்,ஏப்.18

தமது இயக்கம் மீது பிரிட்டிஷ் அரசு விதித்துள்ள தடைக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்துக்கொண்டதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்க எமது விடுதலை அமைப்பு முடிவு செய்திருக்கிறது. இது சம்பந்தமாக பிரபல ஆங்கில சட்டவல்லுநர்களுடன் நாம் கலந்தாலோசித்து வருகின்றோம். முதல் நடவடிக்கையாக, எமது இயக்கத்தின் மீதான தடையை நீக்கி விடுமாறு பிரிட்டிஷ் உள்துறை அமைசசருக்கு விண்ணப்பிக்க முடிவு செய்திருக்கிறோம். இவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் மேல்முறையீட்டு ஆணையகத்திற்கு மனுச்செய்து வழக்குத் தொடரவும் தீர்மானித்திருக்கிறோம் - என்று கூறியுள்ளார் அன்ரன் பாலசிங்கம்.

லண்டனில் உள்ள சில தனி நபர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக பிரிட்டனின் தடைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிப்பதையும் அதற்காக பொதுமக்களிடம் நிதி சேர்த்து வருவதையும் அவர் கடுமையாகக் கண்டித்தார்.

பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில், பிரிட்டிஷ் அரசு, விடுதலைப் புலிகள் இயக்கத்தை இணைத்துக் கொண்டது குறித்து உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஆத்திரமும் கவலையும் கொண்டுள்ளனர் -

பிரிட்டனின் தடையானது நோர்வே அரசு முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகமாக அமைந்துள்ளது. பிரிட்டனின் இந்த முடிவு இலங்கை அரசாங்கத்தின கடும்போக்குக்கு முண்டுகொடுத்து ஊக்கமளிப்பதாக இருக்கிறது. இதனால் போர் நெருக்கடியைத் தணித்து சமாதான சூழலையும் இயல்பு நிலையையும் உருவாக்க சிங்கள அரசு மறுத்து வருகிறது -

### மாற்று வழிகள்

பிரிட்டன் விதித்துள்ள தடை லண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய சமாதானப் பேரவையினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.18

தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் தென்பகுதிப் பத்திரிகையாளர் அடங்கிய பத்துப் பேர் கொண்ட குழுவினர் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

நான்கு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இக் குழுவினர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்ற இருக்கின்றனர்.

தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தலைமையில் வந்துள்ள இக் குழுவினர் இன்று யாழ்.மூத்த பிரஜைகளை முதலில் சந்திப்பர்.

அதன் பின்னர் மகளிர் அபிவிருத்தி நிலையம், சட்டத்தரணிகள் சங்கம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், வர்த்தகர் சங்கம், மீன்பிடி அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடுவர். (க-3)

## பேச்சை ஆரம்பிக்கக் கூடிய இணக்கப்பாடு இன்னும் இல்லை

### அமைச்சர் ஜயரத்ன கூறுகிறார்

கொழும்பு,ஏப்.18

அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சை ஆரம்பிக்கும் அளவுக்கு இன்னமும் இணக்கப்பாடு காணப்படவில்லை என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

பேச்சுக்கள் எப்போது, எங்கே ஆரம்பிக்கும் என்பது குறித்து இந்த மாத முடிவுக்குள் அறிவிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தது தொடர்பாகக் கேட்ட சமயமே ஜயரத்ன இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று இன்ன

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாவது தடவை தப்பியோடி கைதுசெய்யப்பட்ட இளைஞர்!

யாழ்ப்பாணம்,ஏப்.18

ஏற்கனவே இரு தடவைகள் சிறை அதிகாரிகளுக்கு டிமிக்கிவிட்டு தப்பி ஓடி கைதுசெய்யப்பட்ட கைதி ஒருவர், யாழ்.சிறைச்சாலைக் கூரையைப் பிரித்து மீண்டும் தப்பி ஓடினார்; எனினும் அவர் பின்னர் கைதுசெய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைக் காவலில் இருக்கும் கோண்டாவிலைச் சேர்ந்த மார்க்கண்டு சுதன் (வயது 23) என்பவரே நேற்றுமுன்தினம் மூன்றாவது தடவையாகத் தப்பியோடியவர் ஆவார்.

யாழ்.சிறைச்சாலையில் கைவிலங்கிடப்பட்ட நிலையில் இருந்த இவர் கைகள், கால்களில் போடப்பட்டிருந்த விலங்குகளை உடைத்தெறிந்து, சிறைச்சாலைக் கூரையைப் பிரித்து தப்பி ஓடியுள்ளார்.

எனினும் சிறைச்சாலைக்கு அருகில் காவலில் இருந்த படையினரிடம் இவர் வகையாக மாட்டிக்கொண்டதை அடுத்து மீண்டும் சிறைச்சாலை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 2492
இரண்டாம் பரிசு இல. 1135
மூன்றாம் பரிசு இல. 983

ஐந்து ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:

*1749, 1018, 2051, 2691, 2467*

*இந்தப் பரிசுக்குரியவர்கள் 25.04.2001 ஆம் திகதிக்குள் நிலையத்தாருடன் தொடர்புகொண்டு பரிசைப் பெற்றுக்கொள்ளவும்.*

*- நிர்வாகம்.*

**கலைமணி சனசமூக நிலையம்**
கட்டப்பிராய். (86782)


## பழுதடைந்த சிகரெட்டுகள் விற்பனை

யாழ்நகர வர்த்தக நிறுவனம் ஒன்று பழுதடைந்த அல்லது காலாவதியான சிகரெட்டுகளை கொழும்பிலிருந்து தருவித்து இங்கு விற்பனை செய்யும் மோசடி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வகை சிகரெட்டுகள் வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாகக் கடத்திவரப்பட்டவையாகும். இதற்கும் சிலோன் டுபாக்கோ கொம்பனிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதைப் பாவனையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அறியத் தருகின்றோம். அத்துடன் வர்த்தகர்கள் இப்படி ஏமாற்றப்படுவதைத் தவிர்க்குமுகமாக இதற்கென அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமும், விற்பனையாளர்களிடமும் தங்களது சிகரெட் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(86735) - வடபகுதி விற்பனை அதிகாரி.


## MATHS CENTRE

M.M.V.Road - Nelliady.

வடமராட்சி, தென்மராட்சியின் அனுபவமிக்க ஆசிரியர் குழு

**O/L- DAY CLASS**

பிரிவு II

ஆரம்பம்:- இன்று (18-04-2001) புதன் 8.00 a.m. (ப.நே)


**A/L - 2003 (கலை)**

பிரிவு II

வடமராட்சியின் பிரபல்யமான சிறப்பு கலை பட்டதாரிகள் ஆசிரிய குழு

ஆரம்பம்:- இன்று (18.04.2001) புதன்கிழமை 10.00 a.m. (ப.நே) (86759)


## 41ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 27 - 05 - 1957

மறைவு 09 - 03 - 2001

அமரர்

### சோமசுந்தரம் கமலநாதன் (நாதன்)

அன்புக் கடலே! பண்பின் சின்னமே!!
ஆறுதல் சொல்ல யாரிருந் தென்ன? இப்பாரினிலே
இல்லறமாம் நல்லறத்தில் மூன்றாண்டு முடியுமுன்
ஈடு இணையில்லா உன்அன்பை யார்தருவார்?
உனக்கு நிகர் நீயேதான் உத்தமனே!
அழகுத் திருமுகமும் அன்பான வார்த்தையும்
எண்ணி அடங்கவில்லை எம் விழி நீர்!
தாங்காத வேதனையில் தாளாமல் தவிக்கிறோம்
நாமிங்கு!

*முருகமூர்த்தி கோயிலடி,*
*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(86741)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடமாகாண ஆசிரியர் சங்கம் நடத்தும் ஆசிரியர் தொழில்சார் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'ஆசிரியர் கடமைக் கூறுகள்' என்னும் பொருளில் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் கா.நடராசாவும், 'ஆசிரியர்க்கான ஒழுக்காற்று விதிகள்' என்னும் பொருளில் ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் கா.சந்திரராசாவும், 'அரச திணைக்களங்களில் செயலாற்றுகைக் கணிப்பீடு' என்னும் பொருளில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனும், 'ஓய்வூதியர் கணிப்பீடுகள்' என்னும் பொருளில் அரசாங்க லிகிதர் சேவைச் சங்க வடபிரதேசக் கிளைச் செயலாளர் எஸ்.தவராசாவும் கருத்துரை வழங்கவுள்ளனர். (ம-5)

## வடமராட்சி ஆசிரியருக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.18

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளில், புதிய கல்விச் சீரமைப்பின் கீழ் தரம் 8, 11 வகுப்புகளில் சமூகக்கல்வியும் வரலாறும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் நாளை வியாழக்கிழமை முதல் 3 தினங்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற இருக்கின்றன.

வடமராட்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களை தவறாது இதில் கலந்துகொள்ளும் படியும் -

தேசபடக்கல்வி சம்பந்தமான விளக்கங்களும் இந்தச் செயலமர்வில் வழங்கப்படவுள்ளதால் இது தொடர்பான விளக்கம் தேவைப்படுவோரும் இதில் கலந்துகொள்ளலாம் என்றும் - வலயப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். (க-3)

## தவறவிட்ட பொருள்களைப் பெறலாம்

புத்தாண்டு தினத்தன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சியில் பங்குபற்றியவர்களால் தவறவிடப்பட்ட சில பொருள்கள் நல்லூர் பிரதேச சபையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புஸ்பராசா வினோதன் என்பவரின் வி.சே.அட்டை மற்றும் கைக்கடிகாரம் ஒன்று, சைக்கிள் திறப்பு ஒன்று, கால் கொலுசு ஒன்று என்பனவே கண்டெடுக்கப்பட்டுள்ளன. (க-3)


**சயன்ஸ் அக்கடமி**
நெல்லியடி

**A/L 2003**

தென்மராட்சி கலைப்பிரிவு,
வர்த்தகப்பிரிவு
மாணவர்கள் அனைவரும் நாளை (19-04-2001) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வருகை தரவும்.

ஆசிரியர்:- திரு.கமலநாதன்
தமிழ், இந்து நாகரிகம், இ.சமயம்
புவியியல்:- திரு.நித்தி
அளவையியல்:- திரு.சத்தி

ஐந்துபாட மாணவர்களும் வருகை தரவும்

(86769) -நிர்வாகி.

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய், சிம்ரன், விவேக்
பிரியமானவளே
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)
(86744)

**ராஜா**
யாழ்ப்பாணம்
கார்த்திக், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
ரோஜாவனம்
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
(C/16329)

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
யாழ்ப்பாண கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்

**AIR CONDITIONING & REFRIGERATION**
குளிரூட்டுதல் பயிற்சி நெறி
(குளிர்சாதனப் பெட்டி, A/C பழுதுபார்த்தல், பராமரித்தல்)

எமது தொழில்நுட்ப நிறுவனத்தில் சிறிது இடைவெளிக்குப்பின் மீண்டும் இப்பயிற்சி நெறியானது ஏப்ரல் மாத இறுதி வாரத்தில் (25-04-2001) ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பப்படிவங்களை காலை 9.00மணி முதல் மாலை 4.00மணி வரை வார இறுதி நாள்கள் தவிர்ந்த ஏனைய வார நாள்களில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பயிற்சிக் காலம் : 6 மாதங்கள் - மொழி மூலம் : தமிழ்
பயிற்சிக் கட்டணம் : ரூ.1000/=

JCIT
Director
Jaffna College Institute of Technology,
Vaddukoddai. (C/16330)


## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



பாரினில் 16 - 02 - 1938

பரலோகத்தில் 18 - 04 - 1999

### அமரர் வே.நாகலிங்கம் (நாகராசா)

(ஓய்வு பெற்ற சிவில் உத்தியோகத்தரும் (கடற்படைத் திணைக்களம்) "தங்கவேல் ஸ்ரோர்ஸ்" உரிமையாளரும்)

அன்பே! ஆண்டவரே!! அப்பாவே!!!
ஆசை மாமாவே! தாத்தாவே!! அப்பப்பாவே!!!
ஆசை ஐயாவே! அன்புத் தம்பியே!! அண்ணாவே!!!
அன்ரியப்பாவே! அருமை ராசாவே!!
அத்தானே! ஓடித்தான் வருவாயே!!

*52, நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

அன்னாரின் குடும்பத்தினரும்,
உறவினர்களும்.
(86747)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10 - 11 - 1926

உதிர்வு 19 - 03 - 2001

அமரர்

### சாமி ஆச்சாரி இசக்கி ஆச்சாரி

*குடும்பத்தின் ஒளிச்சுடர் அணைந்து இன்று*
*முபத்து நாள்களாகின்றதோ?*
*மூவிரு நிமிடங்கள் போலிருக்கிறதே அப்பா!*
*உறக்கத்தில் உள்ளது போலல்லவா இருந்தீர்கள் அப்பா!*
*உங்கள் ஆத்மா பிரிந்தது என்று என்னால்*
*நம்ப முடியவில்லையே அப்பா!*
*யாரைவிட்டது விதி அப்பா? என்னையும் பற்றிக் கொண்டதே*
*விதி என்னும் சதி அப்பா! துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள*
*யாருண்டு எனக்கு அப்பா?*
*உங்கள் இறுதியாத்திரையில் ஒதுக்கிவிட்டனரே என்னை அப்பா!*
*எனினும் தேற்றிக் கொள்கிறேன் என்னை இன்று*
*உங்கள் திருமேனி காண*
*ஓரிரு நாள்கள் கிடைத்தன என்று அப்பா! வாய்ப்பளித்த*
*சோதரத்துக்கும் கடவுளுக்கும் நன்றி கூறி*
*உங்கள் ஆத்மா சாந்தி அடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் நானும் இன்று!*

*முத்திரைச்சந்தை,*
*நல்லூர்.*

(86754)

பிரிவால் துயருறும்,
**திருமதி கு.விஜி (மகள்)**

# இலங்கைப் பிரச்சினைக்கு தமிழீழம் மட்டுமே தீர்வு

## ம. தி. மு. க. தேர்தல் விஞ்ஞாபனம் வலியுறுத்து

கோவை, ஏப். 18

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தனித் தமிழீழம் மட்டுமே தீர்வாக அமையும் என்று ம. தி. மு. கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தமிழகத்தின் கோயம்புத்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார்.

அடுத்த மாதம் 10-ம் திகதி நடைபெற உள்ள தமிழக, பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தல்களையொட்டி இந்த விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது.

ஈழத் தமிழரின் சுய கௌரவம், அமைதியான வாழ்க்கை ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டுமானால் தமிழீழமே ஒரே தீர்வாகும் என்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம. தி. மு. கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது—

இலங்கைப் படையினரால் தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டும், துன்புறுத்தப்பட்டும் வருகிறார்கள். ஆகவே இந்தியாவின் நலனுக்காகவும், தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்காகவும் முந்தைய காங்கிரஸ் அரசால் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை இந்தியா மீண்டும் பெற வேண்டும்.

இந்தியாவின் அரச கரும மொழி என்ற அந்தஸ்து தமிழ் மொழிக்கு வழங்கப்படவேண்டும். துறைசார் கல்விகள் தமிழ்மொழி மூலமும் கற்பிக்கப்படவேண்டும்.

நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் ம. தி. மு. க. உறுப்பினர்கள், அவர்களதும், குடும்பத்தினதும் சொத்துக்களை அவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு முன்னர் பகிரங்கமாக வெளியிட வேண்டும். யார் மீதாவது ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தால் அவர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

## யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவரின்

## இந்திய உணவகம் தயாரித்த 'கின்னஸ்' சாதனைத் தோசை

யாழ்ப்பாணத்தில் வசித்த பின்னர் இந்தியா சென்றவர் தயாரித்த தோசை 'கின்னஸ்' உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்ட காலத்துக்கு முன்னர் இந்தியாவுக்கு சென்றவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராமாவதர் கொயங்கா.

இவர் அஹமதாபாத் நகரில் 'சங்கல்ப்' என்ற உணவகத்தை நடத்தி வருகின்றார்.

ராமாவதரும், அவரது 15 சமையற்காரர்களும் சேர்ந்து 25 அடி தோசை ஒன்றை தயாரித்திருந்தனர். இந்தத் தோசையின் நிறை 7.5 கிலோகிராம் ஆகும்.

இதற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட தோசைத்தட்டில் இத்தோசை வார்க்கப்பட்டது.

பிரமாண்டமான இந்தத் தோசை 'கின்னஸ்' உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளதாகவும், அதற்கான சான்றிதழ் கடந்த மாதம் தனக்கு கிடைத்ததாகவும் ராமாவதர் தெரிவித்துள்ளார்.

விரைவில் தமது உணவகத்தில் இந்த ரகத் தோசைகள் விற்கப்பட உள்ளதாகவும் ஒரு தோசையின் விலை 5 ஆயிரம் ரூபா என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ-9)

## 'தெகல்கார்' ஊழல் தொடர்பாக

## அரசு பதவிவிலகக் கோருவதை காங்கிரஸ் கட்சி கைவிட்டது

புதுடில்லி, ஏப் 18

'தெகல்கார்' ஊழல் தொடர்பாக மத்திய அரசு பதவிவிலகும் கோரிக்கையைக் கைவிடுவதாகக் காங்கிரஸ் கட்சி அறிவித்தது.

அதே சமயம், ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஊழல் குறித்து முழுவதுமாக ஆராய நாடாளுமன்றக் கூட்டுக்குழு அமைக்க வேண்டும் என்றும்— காங்கிரஸ் கட்சி நிபந்தனை விதித்துள்ளது.

ஓய்வு பெற்ற நீதிபதியைக் கொண்டு அரசு தற்போது நடத்தி வரும் விசாரணை போதுமானது அல்ல என்றும் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். (ஒ-6)

## ஆஸ்மாவுக்கு புதிய மருந்து

கொல்கத்தா, ஏப். 18

ஆஸ்மா நோயினால் அவதிப்படுபவர்களுக்குக் குணமளிக்கும் மூலிகை மருந்தை இந்திய அரசின் பாரத வேதியியல் மற்றும் உயிரியல் கழகம் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் அறிமுகப்படுத்தியது.

இந்த மூலிகை மருந்தின் திரவ வடிவம், 200 மில்லி லீட்டர் 20 ரூபாவுக்கும், குளிகை ஒன்று 6.50 க்கும் விற்கப்படும்.

## தமிழக அரசியலில்...

## கிருஷ்ணகிரி தொகுதியில் ஜெயலலிதா மனுத்தாக்கல்



சென்னை, ஏப். 18

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் ஆரம்பிக்கப்பட்ட நேற்று முன்தினம் அ. தி. மு. க. பொதுச் செயலாளர்ஜெயலலிதா கிருஷ்ணகிரி தொகுதியில் மனுத்தாக்கல் செய்தார்.

பிரதான கட்சிகளின் தலைவர்களில் ஜெயலலிதா மட்டுமே இதுவரை மனுத்தாக்கல் செய்துள்ளார். வேறு சில இடங்களில் சுயேட்சைகள் மனுத்தாக்கல் செய்தனர்.

ஜெயலலிதாவின் மனுவை அதிகாரி பெற்றுக் கொண்ட போதும், அதனை ஏற்றுக் கொள்வது குறித்து தேர்தல் ஆணையம் பின்னரேயே முடிவு செய்யும்.

கிருஷ்ண கிரியுடன், ஆண்டிப்பட்டியிலும் போட்டியிட ஜெயலலிதா தீர்மானித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## ம. தி. மு. க. செய்தித் தொடர்பாளர் தி. மு. கவில் இணைந்தார்

சென்னை, ஏப். 18

ம. தி. மு. கவில் செய்தித்தொடர்பாளராகப் பதவி வகித்த கே. எஸ். ராதாகிருஷ்ணன், நேற்று அந்தக் கட்சியில் இருந்து விலகி, தி. மு. கவில் சேர்ந்தார்.

சென்னையில் உள்ள தி. மு. க. தலைமையகமான அறிவாலயத்தில் முதல்வர் கருணாநிதி முன்னிலையில் அவர் தி. மு. கவில் இணைந்தார்.

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை கோபால்சாமியின் வலது கரமாக தொண்டர்களால் ராதாகிருஷ்ணன் கருதப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## சிறுவரைக் கடத்துவதில் ஈடுபடும் கப்பலைப் பிடிக்கப் பிடியாணை

சிறுவர்களை அடிமைகளாக்குவதற்காக கடத்திச் செல்லும் கப்பல் ஒன்றின் கப்டன் மற்றும் பணியாளர்களைக் கைது செய்ய சர்வதேச அளவில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

கமரூன் உட்பட சில ஆபிரிக்க நாடுகளின் துறைமுகங்களுக்குச் சென்று சுமார் 250 சிறுவர்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட கப்பலை கடந்த வியாழக்கிழமை முதல் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் அடிமைகளாக்கப்படுவதற்காக சிறுவர்கள் கடத்தப்படுவதாக 'இண்டர்போல்' எனப்படும் சர்வதேச பொலீஸ் அமைப்புக்கு முறைப்பாடுகள் கிடைத்தன.

அவற்றையடுத்து, அந்தக் கப்பலின் கப்டனையும், பணியாளர்களையும் கைது செய்யும்படி 'இண்டர்போல்' சர்வதேச பிடியாணை பிறப்பித்துள்ளது.

இதேசமயம், பிடியாணை பிறப்பிக்கப்பட்டதால், சிறுவர்கள் அனைவரையும் கொன்று கடலில் வீசி விட்டு, தாம் சிறுவர்களைக் கடத்தவில்லை என்று கூறி கப்பல் பணியாளர்கள் தப்பித்து விடும் அபாயம் உள்ளதாக அஞ்சப்படுகிறது.

வேலை செய்யத் தொடங்கியதும் பெற்றோருக்கு பணம் அனுப்புவதாகக் கூறி அழைத்துச் செல்லப்படும் சிறுவர்களை கொக்கோ தோட்டங்களில் அடிமைகளாக விற்கும் தொழில் மேற்கு மற்றும் தெற்கு ஆபிரிக்காவில் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ—6)

## இந்தியாவுக்கு சீனா அழைப்பு

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, அங்கு அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டும் என்று சீனா அழைப்பு விடுத்துள்ளது. (ஒ)

## தலையால் ஒட்டிப் பிறந்து, பிரிக்கப்பட்ட

## நேபாள இரட்டைக் குழந்தைகளின் மூளைகளில் பாதிப்பென அச்சம்

சிங்கப்பூர்சிற்றி, ஏப். 18

தலையால் ஒட்டிப் பிறந்து சத்திர சிகிச்சை மூலம் தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட நேபாள இரட்டைக்குழந்தைகளான கங்கா, ஜமுனாவின் இடதுபுற மூளைகளில் சிறு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இரண்டு குழந்தைகளினதும் வலது பக்க உடல் பகுதிகள் பலவீனமான நிலையில் இருந்து வருவதாலேயே இந்த அச்சம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு மனிதனின் உடலின் இடது பகுதியை, அவனது மூளையின் வலது பகுதியும், உடலின் வலது பகுதியை மூளையின் இடது பகுதியும் கட்டுப்படுத்துகின்றன.

தற்போது கங்காவும், ஜமுனாவும் கண்களைத் திறந்து பார்ப்பதுடன் கை, கால்களை அசைப்பதாகவும் —

அதிலும் இடதுபுற அவயவங்களையே குழந்தைகள் அசைப்பது வலது புற மூளை சிறப்பாகச் செயற்படுவதை மட்டும் காட்டுவதாகவும் — மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

நாளடைவில் இந்தக் குறைபாடு குணமடையலாம் என்று எதிர்பார்க்கும் மருத்துவர்கள் தொடர்ந்து குழந்தைகளை தீவிர மருத்துவக் கண்காணிப்புக்குட்படுத்தி வருகிறார்கள்.

கடந்த ஆண்டு நேபாளத்தில் தலையால் ஒட்டிப்பிறந்த கங்கா, ஜமுனா என்ற இரட்டைப் பெண் குழந்தைகள் சிங்கப்பூர் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மூலம் வெட்டிப் பிரிக்கப்பட்டது தெரிந்ததே. (ஒ-9)

## மீண்டும் ஆரம்பித்த இந்திய நாடாளுமன்றம்

புதுடில்லி, ஏப். 18

'தெகல்கார்' செய்தி நிறுவனம் அம்பலப்படுத்திய ஆயுத பேர ஊழல் தொடர்பாக பல நாள்கள் தடைப்பட்டிருந்த இந்திய நாடாளுமன்ற செயற்பாடுகள் நேற்று மீண்டும் ஆரம்பித்தன.

ஆயுத பேர ஊழல் காரணமாக மத்திய அரசு பதவி விலகக்கோரி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டதால்நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தடைப்பட்டிருந்தன.

## தலிபானின் முன்னணிதலைவர் காலமானார்

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் அமைப்பின் முன்னணித் தலைவர் முல்லா மொகமெட் ரபானி பாகிஸ்தானில் காலமானார்.

கடந்த சிலமாதங்களாகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த ரபானி நேற்று முன்தினம் அதிகாலை தனது 45 ஆவது வயதில் காலமானார்.

## பிரிட்டனின் ஆயுத ரகசியத்துடன் காணாமற் போயுள்ள கணனி

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சின் தேசிய பாதுகாப்பு இரகசியங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த கணனி ஒன்று காணாமல் போய் விட்டது.

பிரிட்டிஷ் இராணுவத்திற்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய ஆயுதங்கள் பற்றிய முக்கிய தகவல்கள் அந்தக் கணனியில் அடங்கியிருந்ததாகவும்—

இதனை எடுத்துச் சென்ற அதிகாரி தான் பயணித்த வாடகைக் காரின் பின் இருக்கையில் அதனை மறந்து விட்டுச் சென்றதாகவும்— கூறப்படுகிறது—

இந்தச் சம்பவம் பற்றி பாதுகாப்பு அமைச்சகமோ, பொலீஸாரோ எதுவித கருத்துகளையும் வெளியிடவில்லை.

பாதுகாப்பு இரகசியங்கள் அடங்கிய கணனி காணாமல் போனது குறித்து 'மிரர்' பத்திரிகை செய்தி வெளியிட்டதை அடுத்தே இந்த விடயம் பகிரங்கமானது.

இந்தத் தகவலைத் தொடர்ந்து கடந்த ஓராண்டு காலத்தில் இராணுவ உளவுத்துறைத் தகவல் அடங்கிய கணனிகள் பல தடவைகள் காணாமல் போயிருக்கும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ஒ-9)

# மரண அறிவித்தல்கள்

## முத்து இராசலிங்கம் (பாலதுரை)

(இளைப்பாறிய P. W D. ஓவசியர்)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இந்து மகளிர் வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய முத்து இராசலிங்கம் 13—04—2001 இல் காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

தகவல்:-

தி. செல்லத்துரை

66/16, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம்.

(86762)

## திருமதி மும்மூர்த்தி செல்வராணி

ஏழாம் கட்டை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் நாவாந்துறையைப் புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி மும்மூர்த்தி செல்வராணி 10 — 04 — 2001 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தம்பிப்பிள்ளை - இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும் அருமைநாயகம் - பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகளும் மும்மூர்த்தி (வயறிங் மூர்த்தி, றொபேட் கராஜ்) அவர்களின் அன்பு மனைவியும் கௌசிகா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11 - 04 - 2001 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 7 ஆம் கட்டை சண்டிலிப்பாயில் நடைபெற்றுப் பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தவிர்க்க முடியாத காரணத்தால் மரண அறிவித்தல் உடன் கொடுக்க முடியாமைக்கு மிக மனம் வருந்துகின்றோம்.

தகவல்:

அ. மும்மூர்த்தி
(கணவர்)

7 ஆம் கட்டை,
சண்டிலிப்பாய்.

(86739)

## நாகலிங்கம் ராஜேந்திரன்

நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் ராஜேந்திரன் 08 - 04 - 2001 ஞாயிற்றுக்கிழமை சுவிஸ்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (நில அளவையாளர்) மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், ரவீந்திரன், ஞானேஸ்வரி, விமலேஸ்வரி, நகுலேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவனேஸ்வரன், சிவாகரன், புவனேஸ்வரன், பத்மசோதி, ஆகியோரின் அன்பு மைத்துனரும் விவேக், வினித், நிவேதிகா, சங்கீத், சகானா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18 — 04 — 2001) புதன்கிழமை சுவிஸ்சில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சோ. சின்னத்துரை
(மாமன்)

முன்னாள் உரிமையாளர்,
நாகபூசனி ஸ்ரோர்ஸ்,
முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

(86738)

## செல்லத்துரை தவவிநாயகம் (J.P.)

(விதானையார், அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு பிரான்ஸில் வசித்தவராகிய செல்லத்துரை தவவிநாயகம் (முன்னாள் விதானையார், முன்னாள் கிராம சபைத் தலைவர் - அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராம முன்னேற்ற சங்க முன்னாள் தலைவர் - அல்லைப்பிட்டி) அவர்கள் கடந்த 10-04-2001 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் அல்லைப்பிட்டி காலஞ் சென்ற செல்லத்துரை (உடையார்) - சொர்ணம்மா ஆகியோரின் அன்பு மகனும், கிருஸ்ணாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டெனியாய பிரபல வர்த்தகர் வி. எம். வேலுப்பிள்ளை (டெனியாய சின்னப்பர், நாரந்தனை) சிவனம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19-04-2001) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

செ. நடேசபிள்ளை
(சகோதரன்)

130, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(86748)

## 125 ஆவது ஆண்டு நிறைவு விழா

அரியாலை, ஏப். 18

புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை வித்தியாலய பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டு வருகிறது. (ம-17)

## விசேட கூட்டம்

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் சிறுவணிக முகாமைத்துவ டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளை முடித்த மாணவர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முகாமைத்துவ டிப்ளோமா சற்கை நெறியை முடித்த மாணவர்கள் முகாமைத்துவ மாணியை தொடர்வது தொடர்பாகவும்—

சிறுவணிக முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் முகாமைத்துவ டிப்ளோமாக் கற்கை நெறியைத் தொடர்வது தொடர்பாகவும்—

இந்தக் கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். (ம-6)

## லயன்ஸ் கழக ஏற்பாட்டில் விவாகப்பதிவு

துன்னாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் விவாகப் பதிவு இன்றி வாழ்ந்து வந்த 39 தம்பதிகளுக்கான விவாகப் பதிவுகள் வடமராட்சி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற இவ் வைபவத்தில் லயன்ஸ் கழக மாவட்டத் தலைவரும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலருமான லயன் ஆ. சிவசுவாமி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (ம-109)

## 4வருடங்களின் பின் பரீட்சைகள் ஆரம்பம்

அரச இயந்திர சாதன மர வேலைப் பயிற்சிப் பாடசாலை மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் கடந்த 4 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு 45 மாணவர்கள் தோற்றுகின்றனர். இடம் பெயர்வு காரணமாக கடந்த 4 ஆண்டுகளாக இடை நிறுத்தப்பட்டிருந்த மேற்படி பரீட்சைகள் தற்போது தான் முதல் தடவையாக நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

## மாடியில் இருந்து விழுந்த சிறுவன்

விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் மாடியிலிருந்து கீழே தவறிவீழ்ந்து படுகாயமடைந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை தும்பளையில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த திபூசியான் ஜெரிஸ் (வயது 9) என்னும் சிறுவனே மாடியிலிருந்து வீழ்ந்து கைமுறிந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

## யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம்

29-04-2001

மேற்படி கூட்டம் 2001 - 04 - 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9. 30 மணிக்கு யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் சமாசத் தலைவர் திரு. ச. முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தலும், பொதுச்சபைக் கூட்டப் பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதமும், கூட்ட நிகழ்ச்சி நிரலும், ஆண்டறிக்கை, கணக்காய்வறிக்கை (01-01-1999 — 31-12-1999) யாவும் தொடர்புள்ள அங்கத்தவ சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தற்போது எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்தவ சங்கங்கள் இவற்றை சமாசக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். கணக்காய்வு அறிக்கையை விரிவாகப் பார்வையிட விரும்பும் சங்கங்கள் அலுவலக நேரங்களில் (காலை 8. 30 — 4. 30) வந்து பார்வையிட்டு ஒத்துழைக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

பதில் மாவட்ட செயலாளர்,
யாழ் மாவட்ட சி.க.கூ. சங்க சமாசம்.

இல. 637 (383), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/16341)

## பின்னுறுதித் தீர்வை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

வழ. இல. ம. நீ/ 231

சாம்பசிவம் பெண் பத்மலதா
முன்னர் பத்மநாதன் மகள்
பத்மலதா
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தற்போது மே/பா த. முருகேசு
7/1, புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

-- வழக்காளி

எதிர்

துரைச்சாமி சாம்பசிவம்
எனப்படும் ஏ. எம். சலீம்
தபாற்பெட்டி இல. 26174
அட்லியா, பாகிறெயன்.

-- எதிராளி

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் 2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் அவரின் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி ச. இளங்கோவனும் சமுகமாகியிருக்க எதிராளிக்கான அழைப்புக் கட்டளை 06-03-2001 திகதிய 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எதிராளி சமுகமளிக்காதபடியால் ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் பிராது அணைக்கப்பட்ட ஆவணங்கள், சாட்சியம் என்பன பரிசீலிக்கப்பட்டு வ2 ஆவணத்தின் மூலம் வழக்காளியால் எதிராளிக்கெதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் மணநீக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் சாவகசசேரி மாவட்ட நீதிமன்றம் 2000 ஆம் ஆண்டு செயல்படமுடியாமல் வழக்கேடுகள் அனைத்தும் அழிந்து போனமையால் வழக்காளி குறித்த வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாது என்பதையிட்டு, திருப்தியடைந்ததன் பேரில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1986 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற திருமணத்தை வழக்காளியை எதிராளி வன்மஉறவறுப்புச் செய்த காரணத்துக்காக ரத்துச்செய்து வெற்றும் வெறிதுமானது எனக்கட்டளையிட்டு இப்பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது

இப்பின்னுறுதித் தீர்வை பற்றிய அறிவித்தல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து (3) மூன்று மாதங்களுக்குள் ஏதும் ஆட்சேபனைகள் தெரிவிக்காதவிடத்து, முற்றான தீர்வையாக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட்ட பின், வழக்காளி தனது கன்னிப்பெயரை உபயோகிக்கலாம் என்றும் திருமணமாகாத பெண்கள் சட்டத்தின் கீழ்வரும் சகல உரிமைகளையும் அனுபவிக்கலாமென்றும் கட்டளையும் தீர்ப்பும் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் 2001--04--09

மன்றின் கட்டளைப்படி

து. சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைவு:
ச. இளங்கோவன்
வழக்காளி சட்டத்தரணி

(86750)

உதயன்

## கோணாதிருக்கட்டும்

சமாதானப் பேச்சுக்களுக்கான சாதக, பாதக நிலைமைகள் ஏறி இறங்கும் என்பது எதிர்பார்த்த ஒன்று தான.

அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கூறியது போல -

சமாதானப் பேச்சும் அதற்கான முன்முயற்சிகளும் உடனடியாகச் சாததியமாகவோ, வெற்றி அளிக்கவோ கூடியவை அல்ல. இடறுண்டு, இழுபறிபபட்டு, தடங்கள் என்று பலவற்றை எதிர்நோக்க நேரிடும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

அத்தகைய ஒரு "குழம்பல்" நிலை இப்போது உருவாகும் என்று சமாதான விரும்பிகள் அஞ்சுகின்றார்கள். விடுதலைப் புலிகள் பிரமுகர்களை மீண்டும் சந்திப்பதற்காக, நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வன்னிக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு நடைபெறவில்லை.

சிங்கள - தமிழ் புதுவருடத்தை ஒட்டி அரசாங்கம் அறிவித்த தாக்குதல் நிறுத்தம் வெசாக் பண்டிகை வரை நீடிக்கப்படக்கூடும் என்று ஹேஸ்யங்கள் கூறப்பட்டன. ஆனால அவ்வாறு நடக்கவில்லை. அரசாங்கத் தரப்பில் அது குறித்து இப்பத்தி எழுதப்படும் வரை எவ்வித உத்தியோகபூர்வமான அறிவிப்பும் வரவில்லை.

மேற்கூறிய நல்ல கருமங்களுககுப் பதிலாக, முல்லைத்தீவுக் கடலில் நேற்றுமுன்தினம் அரசாங்கக் கடற்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சமர் நடைபெற்றது.

சமாதானப் பேச்சுக்களுக்கான முன்முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, இரண்டு தரப்புகளும போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்த வேளையில், இப்படி ஒரு பெரும் சமர் நடைபெற்றமை மக்கள் மத்தியில் கவலையையும், முயற்சிகள் தடைப்பட்டு மீண்டும் போர் மூளுமோ என்ற அச்சத்தையும் உண்டாக்கி உள்ளது.

முல்லைத்தீவுக் கடற்சமர் அரசாங்கத் தரப்பு போர் நிறுத்த நீடிப்புக்கு மட்டுமன்றி, இம்மாதம் இருபத்திநான்காம் திகதி முடிவடைய உள்ள விடுதலைப் புலிகளின் நான்கு மாதப் போர் நிறுத்தம் நீடிக்கப்படுவதற்கும் குந்தகமாக அமைந்து விடக்கூடும் என்று அரசியல் அவதானிகளும் பத்திரிகையாளர்களும் கூட அஞ்சுகிறார்கள்.

சமாதான முயற்சிக்குத் தடங்கல் ஏற்பட்டுவிட்டால், இதுவரை உண்டான முன்னேற்றமும், முயற்சிகளும் வீணாகிப் போய்விடும் வாய்ப்பு உண்டு. பின்னர் முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகும்.

போரை நிறுத்தி, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக எல்லோரும் கருதிய காலம் இது.

முல்லைத்தீவுக் கடற்சமர் அந்த நல்ல சந்தர்ப்பத்தைப் போக்கிவிடக் கூடாது. இரு தரப்புகளும் அமைதி நிலை தோன்ற வேண்டும் என்ற மக்களின் விருப்பத்தை மனதிற் கொண்டு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும். முதற்கோணல் இல்லாதிருப்பது எல்லா வகைகளிலும் நல்ல பெறுபேறுகளைத் தரும் என்று நம்பினால் அது வீண் போகாது.

# மகனுக்குப் போதிய பாடநூல் வழங்கவில்லை; கல்வி அமைச்சரிடம் நஷ்டஈடு கோருகிறார் தந்தை

## ஏனைய அதிகாரிகளுக்கும் கேள்விக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் போதுமான பாடநூல்களை விநியோகிக்காததன் மூலம் தனது மகனின் கல்வி கற்பதற்கான அடிப்படை உரிமையை மறுத்ததற்காக நஷ்டஈடு கோரி தந்தை ஒருவர் கல்வி அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சட்டத்தரணி மூலம் கேள்விக் கடிதம் (Letter of demand) அனுப்பியுள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த அ.பரமேஸ்வரன் என்பவரே சட்டத்தரணி எஸ்.பி.சிவஞானம் மூலம் நஷ்டஈடு கோரும் கேள்விக் கடிதத்தை இம் மாதம் 12ஆம் திகதி அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் சட்டத்தரணி எஸ்.பி.சிவஞானம் குறிப்பிட்டிருப்பதாவது:-

பாடசாலைப் பாடநூல்களை எழுதுவது, அச்சடிப்பது, விநியோகிப்பது ஆகியவற்றுக்கான பிரத்தியேக உரிமையை அரசாங்கம் தன்னிடமே வைத்துக் கொண்டுள்ளது. இந்தப் புத்தகங்களின் பதிப்புரிமை அரசிடமே உள்ளது. இதனால் அவற்றை அச்சிடவோ அல்லது வேறெங்கும் பணம் கொடுத்து வாங்கவோ முடியாது.

எனது கட்சிக்காரரின் ஒரே மகன 10ஆம் தரத்தில் கல்வி கற்கிறார். முதலாம் தவணை முடிவுற்ற இந்த சமயத்தில், பத்துப் பாடங்கள் படிக்கும் அவருக்கு இரு பாடங்களுககான நூல்களே விநியோகிக்கப்பட்டுள்ளன.

முதலாம் தவணைப் பரீட்சையில் இந்த இரு புத்தகங்களைக் கொண்டு மட்டும் படித்துவிட்டு, அனைத்துப் பாடங்களுக்கும் தேர்வெழுதும் நிலை அவருக்கு ஏற்பட்டது.

நாட்டின் மற்றைய பாகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஏழாத இந்தச் சூழ்நிலை, குடாநாட்டின் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு மட்டும் உருவாகியுள்ளது.

இதனால் தனதும், தனது மகனதும் அடிப்படை உரிமைகள், அரசமைப்பு சமத்துவ உரிமை ஆகியவற்றையும் அரசு மறுத்துள்ளதுடன், சர்வதேச குழந்தைகள் பட்டயத்தையும் அரசாங்கம் மீறியுள்ளதாக எனது கட்சிக்காரர் கருதுகிறார்.

அரசாங்கம் பாடநூல்களை விநியோகிப்பதில் தனக்குள்ள கட்டுப்பாட்டைத் தட்டிக்கழித்து, எனது கட்சிக்காரரின் மகனது எதிர்கால முன்னேற்றத்தை ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது. கடந்த மூன்று வருடங்களாகவே குடாநாட்டில் இத்தகைய நிலை வியாபித்துள்ளது.

பத்திரிகைகளும் தனிப்பட்ட அமைப்புகளும் எடுத்துக் கூறியும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் இந்த நிலைமையை சீர்செய்யத் தவறிவிட்டனர்.

இவற்றுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதே எனது கட்சிக்காரரின் வாதம்.

மேற்குறிப்பிட்ட அனைத்தையும் கவனத்தில் கொண்டு எனது கட்சிக்காரரின் உரிமைகள் மீறப்பட்டதற்கு பின்வரும் தொகைகளை நஷ்டஈடாக வழங்குமாறு கோரி இந்தக் கேள்விக் கடிதத்தை அனுப்புகிறேன்.

1. அடிப்படை உரிமைகளை மீறியதற்காக 5 லட்சம் ரூபா.

2. இன்றிலிருந்து எனது கட்சிக்காரரின் மகனுக்கு வழங்கப்படவேண்டிய அனைத்துப் பாடப்புத்தகங்களும் வழங்கப்படும் வரை ஒவ்வொரு கிழமைக்கும் 50 ஆயிரம் ரூபா.

3. அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமத்துவ உரிமையை மீறியதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

4. குழந்தைகள் பிரகடனத்தை மீறியதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட நஷ்டஈட்டுத்தொகைகளை வழங்கத் தவறினால் அவற்றைப் பெறுவதற்காக வழக்குத் தொடரப்படும்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக் கடித்தத்தின் பிரதிகள் பாடநூற் பிரசுரப் பகுதி ஆணையாளர், தேசிய கல்வி நிறுவன இயக்குநர் நாயகம், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாடநூல் விநியோகம் குடாநாட்டில் சீராக நடைபெறாததால் தனது மகனின் கல்வியும் ஏனைய மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து மேற்படிக் கட்சிக்காரர் அ.பரமேஸ்வரன் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல் கடிதம் ஒன்றைக் கடந்த பெப்ரவரி 2ஆம் திகதி அனுப்பியிருந்தார். அது சம்பந்தமான செய்தி கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதிய உதயனில் "யாழ்.மாணவனின் தந்தை சட்டமா அதிபருக்குக் கடிதம், இலவச பாடநூலை வழங்காதது உரிமை மீறல்! அரசு மீது வழக்குத் தொடர முன்னேற்பாடு" என்ற தலைப்பில் வெளியாகியது. (அ-ஒ)

## வண்ணை வீரமாகாளி அம்மன்

# ஆலயப் பொறுப்புகள் குறித்த நீதிமன்றின் முந்திய கட்டளை ரத்து

யாழ்ப்பாணம் வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய பொறுப்புக்கள் குறித்து யாழ்ப்பாண நீதிமன்றத்தினால் 1997 யூலை 22 ஆம் திகதி இட்ட கட்டளை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் பூசைகளும் பொறுப்புகளும் சிவலோகநாதன் இராஜேந்திரக் குருக்கள் எனபவரிடம் மேற்குறிப்பிட்ட திகதியில் நீதிமன்றத்தினால் கையளிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் வரவு - செலவுக் கணக்குகளை நீதிமன்றத்திற்கு சமர்பபிக்க வேண்டுமென்று கட்டளை இடப்பட்டு வந்தது.

நீதிமன்றத்தின் உத்தரவின் படி இவர் செயற்படவில்லை என்றும் -

மாறாக நீதிமன்ற அனுமதியின்றி ஆலயத்தில் புதிதாக திருப்பணி வேலைகள் செய்வதாகக் கூறி ஆயிரக்கணக்கான ரூபா பணத்தை பொது மக்களிடம் இருந்து சேர்த்து வருகிறார் என்றும் -

வங்கியில் தனது பெயரில் கணக்கு வைத்திருக்கிறார் என்றும்-

ஆலயப் பூசைகளுக்கு உரித்தானவர்கள் மன்றுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தப்பட்டு 1997 யூலை 27 ஆம் திகதியில் இடப்பட்ட கட்டளை நீதிமன்றத்தினால் ரத்துச் செய்யப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து -

வழக்கு விசாரணைகள் முடியும் வரை ஆலயத்தில் நித்தியபூசையை நடத்துவதற்கான பொறுப்புக்கள், ஒவ்வொரு மாதமும் தலா ஏழு நாள்களுக்கு பின்வருபவர்களிடம் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

சின்னச்சாமிக் குருக்கள் செல்வராசாக் குருக்கள், நாகராசாக் குருக்கள் சந்திரகுமார், நடராசாக் குருக்கள் சண்முகரத்தின ஐயர், சிவசுப்பிரமணியக் குருக்கள் கைம்பெண் சிவபாக்கியம்.

இவர்கள் சுழற்சி முறையில் நித்திய பூசைகளுக்கு தலா ஏழு நாள்களும் பொறுப்பாக இருப்பார்கள்.

ஆலயத்தில் தற்பொழுது நடைபெறும் திருப்பணி, புனருத்தாரண வேலைகளுக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் தனியான ஒரு நடைமுறைக் கணக்கை வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் என்ற பெயரில் ஆரம்பிக்குமாறு மேற் குறிப்பிட்ட நால்வருககும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நடைமுறைக் கணக்கில் இருந்து பணம் வாபஸ் பெற வேண்டுமாயின் தேவைபற்றி நீதிமன்றத்திற்குத் தெரிவித்து, நீதிமன்றத்தின் முன் அனுமதியுடனேயே வங்கியில் காசோலை மாற்றப்படலாம் என்று இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பணிக்கு அன்பளிப்பு பணம் பெறுவதற்காக ஏற்கனவே அச்சிடப்பட்ட சி.இராஜேந்திரக் குருக்களின் பெயர் பொறிக்கப்பட்டுள்ள பற்றுச் சீட்டைப் பயன்படுத்தி செல்வராசாக் குருக்களும், சண்முகரெத்தினக் குருககளும் கையொப்பமிட்டு பணத்தைப் பெறலாம் என்றும் -

இதுவரை திருப்பணிக்கு அன்பளிப்புச் செய்தவர்களின் பெயர், விவரங்கள் மற்றும் செலவு விவரங்கள் உரிய ஆவணங்களுடன் சி.இராஜேந்திரக் குருக்களினால் இன்று 18ஆம் திகதிக்கு முன் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவு இடப்பட்டுள்ளது.

இத்திருப்பணி வேலைகளுக்கென சேர்த்து இலங்கை வங்கி பி24287 இலக்க நடைமுறைக் கணக்கிலுள்ள பணம் முழுவதும் மன்றின் கட்டளைப்படி ஆரம்பிக்கப்பட விருக்கும் புதிய நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்படவேண்டுமென்றும் -

இக்கணக்குக்கு பணம் மாற்றப்படும் வரை தற்போதைய கணக்கிலுள்ள பணத்தை மீளப்பெற அனுமதிக்கக் கூடாது என்றும் இலங்கை வங்கி கிளை முகாமையாளருக்கு நீதிமன்றினால் உத்தரவு இடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய இந்த ஆலயத்தின் திருப்பணிகளும் புனருத்தாரண வேலைகளும் எவ்வாறு செய்யவேண்டும் என்பது பற்றியும் அதற்கு யார் யாரை நீதிமன்றம் பொறுப்பாக நியமித்துள்ளது என்பது பற்றியும் -

திருப்பணிக்கு பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் பணம் எவ்வாறு கையாளப்படவேண்டும் என்றும் உத்தரவு இடப்பட்டுள்ளதுடன் இதனைப் பொதுமக்கள் அறியக் கூடியதாக பகிரங்க அறிவித்தல் செய்யப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் நியமித்த முன் கூறிய நால்வருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (க-5)

## நாளை

சித்திரை 06
வியாழக்கிழமை
திதி. ஏகாதசி
மாலை : 5.48 வரை
நட்சத்திரம்: சதையம்
முன்னிரவு : 10.18 வரை
திருநாவுக்கரசர் குருபூசை
கரிநாள்
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.32 - 12.02

## உதயவாக்கு

நண்பர்களைப் பற்றி நல்லது பேசு; எதிரியைப் பற்றி ஒன்றும் பேசாதே.

## வாசகர் திருமுகம்

### ஆலயங்களில் பூசை தவிர்ந்த நேரத்தில் நிகழ்ச்சிகளை நடத்துங்கள்

மீசாலையிலிருந்த இடம்பெயர்ந்து மானிப்பாயில் வசிக்கும் எனக்குக் கடந்த மகா சிவராத்திரியன்று இணுவில் காரைக்கால் சிவன் கோயிலில் நித்திரை விழித்து வழிபடக்கூடிய பேறு கிடைத்தது. அவ்வாலயத்தின் மூலஸ்தான அமைப்பும், மூல மூர்த்தியான லிங்கமும் விசேடமானவை. மூலஸ்தானத்தின் பின் மூன்று பக்கங்களிலும் சிறிய கதவுகள் உள்ளன.

பெரிய அளவிலான லிங்கத்தல் முன்னே நோக்கியவாறு சிவன் நிஷ்டையில் அமர்ந்திருக்கிறார். பின் பகுதி லிங்கத்தில் லிங்கோற்பவ மூர்த்தி இருக்கிறார். லிங்கத்தின் தென் பகுதியில் தெட்சணாமூர்த்தி அமர்ந்திருக்கிறார்.

இக்கோயில் தொன்மை வாய்ந்தது என்பதற்கு அங்கு தொல்பொருள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது கிடைத்த - தொன்மை வாய்ந்ததாகத் தீர்மானிக்கப்பட்ட - அனுமான் கல், திரிசூலக் கல் என்பன சான்றாக உள்ளன.

லிங்கோற்பவ காலப் பூசையின் போது (மூன்றாம் சாமப் பூசை) லிங்கத்தின் பின்பக்கம் அமைந்துள்ள லிங்கோற்பவ மூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றமை நல்லதோர் தெய்வீகக் காட்சியாக அமைந்தது.

ஆனால் இந்தக் காட்சியைக் கண்டு வழிபடுவதற்கு ஐம்பதுக்கு உட்பட்ட பக்தர்களே அங்கு இருந்தனர். ஆயிரக்கணக்கானோர் வெளியில் நடைபெற்றுக் கொண்டிருந்த நாடக நிகழ்ச்சியை இரசித்துக் கொண்டிருந்தனர். (எப்படியும் கண் விழித்தால் சரி என்ற நினைப்பில்) இப்படியான பெருமை மிக்க ஆலயத்தில் அபிஷேகம், பூசை என்ப வற்றுக்கு முக்கிய இடம் கொடுத்து அந்த நேரங்கள் தவிர்ந்த வேளைகளில் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

என் போன்ற இடம்பெயர்ந்தவர்களுக்கு இவ்விடம் பெயர்வு இப்படியான அரிய சந்தர்ப்பங்களைத் தந்துள்ளது. இடம்பெயர்ந்து கவலையுடன் வாழும் நிலையில் இப்படியான சந்தர்ப்பங்கள் எமக்கு மகிழ்வைத் தருகின்றன.

எனவே இடம்பெயர்ந்து வலிகாமத்தில் வாழும் எம் பிரதேச மக்கள் தவறாது இவ்வாலயத்தைத் தரிசிப்பது சிறப்பாகும். நழுவவிட்ட நேரத்தையும், தவறவிட்ட சந்தர்ப்பத்தையும் மீளப்பெற முடியாது.

*மீசாலை.* **க. சிவக்கொழுந்து.**

### மாற்றாந்தாய் மனப்பான்மை ஏன்?

இடம் பெயர்வை அடுத்து சாவகச்சேரி இந்துக்கல்லூரி இருவேறு இடங்களில் இயங்கி வருகிறது.

இரு இடங்களில் ஒன்று எல்லோருக்கும் வசதியான இடத்தில், போதுமான பாடநேரங்களுடன் - காலை நேரத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கி வருகிறது. அங்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தளபாடங்கள் கற்பித்தல் உபகரணங்கள், நூலக வசதிகள் என்பனவும் எடுத்துவரப்பட்டு எதுவித குறையுமின்றி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் மறுபுறத்தில் வலிகாமம் - இணுவில் மத்திய கல்லூரியில் இயங்கும் இக்கல்லூரியின் ஒரு பகுதி பெரும் குறைகளுடன் "ஏனோ தானோ" என இயங்கி வருகிறது. வலிகாமத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் சைக்கிள், பஸ் என்பனவற்றில் பெரும் தொகையான மாணவர்கள் இங்கு கற்பதற்கென வருகின்றனர். அதுவும் மாலை நேரத்தில் - அதாவது மதியம் 1.15 முதல் மாலை 4.45 வரை எதுவித கற்பித்தல் உபகரணங்களோ நூலக வசதிகளோ இன்றி இந்தக்கல்லூரி இயங்குகின்றது. அத்துடன் போதிய இடவசதிகளும் இங்கு இல்லை. இதனால் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இந்த வகையில் ஒரு பாடசாலைத் தாய் தனது இரு பிள்ளைகளையும் சமமாக வளர்க்க வேண்டியதை விடுத்து மாற்றாந்தாய் போக்கில் இணுவில் மத்திய கல்லூரியில் கற்கும் ஒருதொகுதி மாணவர்களை புறக்கணித்து நடத்துவது எமக்கு கவலை தருகிறது.

எனவே மாணவர்களது நன்மை கருதி மேற்படி பாடசாலையை காலை நேரத்தில் இயங்கவைக்க வேண்டும் என்பதே எமது அவா. ஏனைய வசதிகள் இல்லாவிட்டாலும் இரண்டாம் தவணை முதல் இந்த பாடசாலையை காலைநேரப் பாடசாலையாக இயங்கவைக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தனிப்பட்ட ஒருசிலரின் வேண்டுதல் அல்ல.

மேலும் இது பாடசாலை நிர்வாகத்தை சாடுவதாகவோ அன்றி நாம் வஞ்சிக்கப்பட்டோம் என்பதற்காகவோ கூறவில்லை. இத்தகைய சூழ் நிலையிலும் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள், நிர்வாகத்தின ருக்கு நன்றி கூறவேண்டும். எனவே எமது கல்லூரி இனிவரும் காலங்களிலும் சிறப்புடன் மிளிர உரியவர்கள் ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

*சாவகச்சேரி இந்துவின் மாணவன்.* **நா. துஷாந்.**

## ஒன்பதாம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 30 . 10 . 1953

மறைவு 18 . 07 . 2000

### அமரர் கந்தசாமி தர்மேசன்

(வலிகாமம் கல்விவலயத் திட்டமிடல் உதவியாளர், காங்கேசன்துறை மாவட்டச் சாரண உதவி ஆணையாளர்)

மணக்கோலங் கொள்ளப் பொன்னுருக்கி நீர்
ஈரேழாண்டைக் கொண்டாடும் நன்னாள் இன்றையா!
பாவிகள் நாமோ ஒன்பதாந் திங்கள் நினைவுநாளை
இதயம்கனத்து நெஞ்சுருகி நினைந்து அஞ்சலிக்கின்றோம்.

**"தரன் இல்லம்",**
*தேவாலயவீதி,*
*மூளாய்,சுழிபுரம்.*

என்றுந் தங்கள் நினைவோடு வாழும்
**மனைவி, முத்தரன்கள்.**

(86693)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மொட்டாகி மலர்வு 24 - 12 - 1945

சருகாகி உதிர்வு 19 - 03 - 2001

### திருமதி துரைராஜா தவமலர்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாய்
நாளும் பொழுதும் கண்டுற்ற வேளையிலே
அள்ளிச் சென்றான் கொடுங்கோலன்
அந்தோ தவிக்கிறோம் நாங்கள் இன்று!

இன்று (18.04.2001) புதன்கிழமை காலை 7.00மணிக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலில் நிகழும் அந்தியேட்டிக் கிரியையிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நிகழும் சபிண்டீகரணக் கிரியையிலும் மற்றும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ந.துரைராஜா**
(சமாதானநீதிவான், விவாகப்பதிவாளர்)
குடும்பத்தினர்.

*'தவமஹால்',*
*அல்வாய்.*

(86641)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 - 07 - 1947

உதிர்வு 21 - 04 - 1998

### அமரர் கதிரவேலு கந்தையா

**(இரத்தினம், மெக்கானிக்)**

அன்புக்கோர் அணையா விளக்காய் உதித்த அன்புத்தெய்வமே!
குலவிளக்காய் மிளிர்ந்து எமது நலம்காத்த அருமைத்தந்தையே!
கலங்குமெங்கள் கண்களெல்லாம் குளமதுவாய் மாறி நீர் அலைமோதுதப்பா!
பலரறிய முடியாது தானே அகன்றதுவே! ஒருமாதம் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(86701)

### வருகை தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.18

அனுமதிப்பத்திரம் பெற்ற மதுபான விற்பனையாளர்களையும், பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், பொது முகாமையாளர் ஆகியோரையும் இன்று புதன்கிழமை திக்கம் வடிசாலைக்கு வருமாறு அதன் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ம-10)

### மூவரைக் காணவில்லையென முறைப்பாடு

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில நாள்களில் மூவர் காணாமற் போயிருப்பதாக அவர்களது உறவினர்கள் ஈ.பி.டி.பி. அமைப்பின் பருத்தித்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரி மாணவனான பரமநாதன் பிரதீபன்(வயது 19 புற்றளை) எனபவர் புத்தாண்டு தினம் முதல் காணாமற் போயுள்ளார்.

மிருசுவில் திருக்குடும்ப கன்னியர் மட மாணவியான சிவாநந்தன் சிறிகலா(வயது 14 பருத்தித்துறை) என்பவரை கடந்த ஞாயிறு முதலும்- நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த திருச்செல்வம் துஷா(வயது12) என்பவர் துன்னாலைக்கு வந்திருந்த சமயம் நேற்று முன்தினம் காலை முதலும- காணாமற் போய்விட்டதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-3-117)

### கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசப் பொதுக்கூட்டம்

சுழிபுரம், ஏப்.18

வலி.மேற்கு பிரதேச எல்லைக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர் வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சித்தங்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சமாசத் தலைவர் இ.தம்பையா அவர்கள தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், வலி.மேற்கு பிரதேச செயலர் க. குணராசா, வலி.மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தி. தியாகமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்புரை ஆற்ற உள்ளனர்.(ம-28)

### தலைமைத்துவப் பயிற்சிநெறி

சுழிபுரம், ஏப்.18

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 13 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இரு நாள்கள் தலைமைத்துவப பயிற்சிநெறி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தரம் 13இல் கல்வி கற்கும் 10 மாணவர்களை அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

பயிற்சி நெறி நடைபெறும் திகதியும் இடமும் வருமாறு:

* 24, 25 ஆம் திகதிகளில் - வட்டு. இந்துக் கல்லூரி
* 26, 27 ஆம் திகதிகளில் - இராமநாதன் கல்லூரி
* 30, 2 ஆம் திகதிகளில் - மானிப்பாய் இந்துக் கல்லூரி
* 14, 15 ஆம் திகதிகளில் - இராமநாதன் கல்லூரி. (ம-28)

### சேவைக்காலச் செயலமர்வுகள்

தென்மராட்சி,ஏப்.18

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் பின்வரும் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைககாலச் செயலமர்வுகளை வடமராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இன்று புதன்கிழமை தரம் 9,10 ஆகிய வகுப்புக்களில் வரலாறும் சமூகக்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி தரம் 10இல் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 21 ஆம திகதி தரம் 10, 11இல் விருப்பத்திற்குரிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் செயலமர்வுகள் நடைபெறும்-

இணுவில் மத்திய கல்லூரியில் எதிர்வரும் 20, 21ஆகிய திகதிகளில தரம் 12, 13 ஆகிய வகுப்புகளில் நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சேவைக்காலச் செயலமர்வுகள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அன்னை மடியில் 13 - 02 - 1953

ஆண்டவன் அடியில் 19 - 03 - 2001

### அமரர் எஸ்.ஆர்.யோகானந்தன்

(சுங்க உதவிப் பணிப்பாளர்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் எஸ்.ஆர்.யோகானந்தன் அவர்கள் "அன்பே உருவாக அறமே செயலாக பண்பே உறைவிடமாக" கொண்டு எனது குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்தார்.

அன்னாரின் சபிண்டீகரணமும் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி (**P¹ Block**), கொழும்பு-4 இல்லத்தில் இன்று(18.04.2001) புதன்கிழமை நடைபெறும் என்பதை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உங்கள் ஆத்மா இறைவனடி சேர உளமாரப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தந்தை, மனைவி, சகோதரர்கள.**

தகவல்:-
*இ.விவேகானந்தன்,*
*அச்சுவேலி.*

(86733)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 04 - 08 - 1919

உதிர்வு 20 - 03 - 2001

### அமரர் செல்லமுத்து சரவணமுத்து

(பலாலி - கைதடி - சுழிபுரம்)

அன்பின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் இலக்கணமாய் இருந்து
எம்மையெல்லாம் வழி நடத்தி வாழ்ந்து காட்டிய
உங்கள் நினைவு, உயிர் உள்ளமட்டும்
எம் நெஞ்சத்தை விட்டு நீங்காது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குலவிளக்கின் துயரச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி ஆறுதல் தெரிவித்தவர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவியவர்கள், உதவுகிறவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (2001-04-19) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தற்காலிக முகவரி
*புறாளாய் வீதி, சுழிபுரம்.*

(86705)

### சம உரிமை, கௌரவம், நீதி என்பனவற்றுக்கு உத்தரவாதமளித்தால்

# தாயக சுயாட்சித் தீர்வுக்கு புலிகள் தயாராக உள்ளனர்

லண்டன்,ஏப்.18

தமிழ் மக்களின் சமவுரிமை, கௌரவம், நீதி என்பனவற்றுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்குமானால் விடுதலைப் புலிகள், தாயக சுயாட்சித் தீர்வுக்கு தயாராகவுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

லண்டனில் இருந்து வெளியாகும் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் மாரிகொல்வினுக்கு கடந்த வாரம் வன்னியில் வைத்து வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தொடரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று அவசியம். இது சமஷ்டியாகவோ, கூட்டமைப்பாகவோ, வட கிழக்குகச் சபையாகவோ, சுயாட்சிப் பிராந்தியமாகவோ இருக்கலாம். அதன் பெயர் முக்கியமானதல்ல. இந்தத் தீர்வுகளில் ஏதாவது ஒன்றை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியும்.

எனினும் கொழும்பிலுள்ள புத்த பிக்குகள்.தீர்மானிக்கும் வாழ்க்கை முறையை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை - என்று தெரிவித்துள்ளார்.

(ம-7))

# டிப்ளோமா பட்டம் பெற்ற 10 பேருக்கு ஆசிரிய நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்ற 10 பேருக்கு தீவக வலயப் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

நியமனம் பெற்றோர் விவரம் வருமாறு:- பூ.வசந்தா(கரவெட்டி மத்தி), கு.ராஜினி(கரணவாய் வடக்கு), த.பிரதீபன்(புலோலி வடமேற்கு), க.முகுந்தன்(நீர்கொழும்பு), க.குணசுந்தர் (புலோலி தெற்கு) ம.கௌரி (பருத்தித்துறை), இ. பிரபலதா(வல்வெட்டித்துறை), சி. ஸ்ரீதரன்(எழுதுமட்டுவாழ் தெற்கு), வி.மங்களவடிவு(மட்டக்களப்பு), மா. சுதாஜினி(கரவெட்டி மேற்கு)

இவர்கள் அனைவரையும் வேலணையில் உள்ள வலயக் கல்வி அலுவலகததுக்கு உடன் சமுகமளித்து கடமையைப் பொறுப்பேற்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ-7)

# கடற்படைக் கப்பல்கள் கட்டுவதற்கு இலங்கைக்கு குரோஷியா உதவும்

## அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.18

இலங்கையில் கடற்படைக் கலங்களைக் கட்டும் திட்டங்களுக்கு குரோஷியா உதவி வழங்கும் என இலங்கைக்கான அந்நாட்டுத் தூதுவர் டாக்டர் சுரான் அன்டிறிக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் போர்ச் சூழ்நிலையில் குரோஷியாவின் இந்த அறிவிப்பு மிக முக்கியமானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகிலேயே கப்பல் கட்டுவதில் மிக வல்லுநர்கள் குரோஷியர்கள். அதிவேகக் கடற்படைப் படகுகள், நீர்மூழ்கிகள், எண்ணெய்த் தாங்கிக் கப்பல்கள் மற்றும் பல வகை பயணிகள் கப்பல்களை தமது நாடு கட்டியுள்ளதாகவும் டாக்டர் சுரான் அன்டிறிக் தெரிவித்தார்.

கடந்த பல தசாப்தங்களில் குரோஷியா 39 கப்பல்களை இந்தியாவுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் குரோஷியாவும் இலங்கையும் மிக விரைவில் சர்வதேச பயங்கரவாதம், போதைவஸ்துக் கடத்தல், பணப்பரிமாற்றம் மற்றும் ஆள்கடத்தல்களுக்கு எதிராக இரு தரப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக குரோஷிய வெளிவிவகார அமைச்சர் ரொனிநோ பிக்குலா தலைமையிலான குழு விரைவில் கொழும்பு வரவுள்ளது.

இதன்போது இலங்கையில் கடற்படைக் கப்பல் கட்டும் திட்டத்துக்கான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இலங்கைக் கடற்படையினர் இஸ்ரேல், சீனா மற்றும் இந்தியாவிடமிருந்தே கப்பல்கள் மற்றும் பீரங்கிப் படகுகளைக் கொள்வனவு செய்து வருகிறார்கள். டோறா ரகப் பீரங்கிப் படகுகளை இலங்கை டொக்யாட் நிறுவனமும் கட்டி வருகிறது.

(ம)

# யாழ்.கூ.சங்கப் பணியாளருக்கு மீளாய்வு செய்த புதிய சம்பளம்

## விரைவில் வழங்க நடவடிக்கை

அரியாலை,ஏப்.18

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்களுக்கான மீளாய்வு செய்யப்பட்ட புதிய சம்பளக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படும் என்று சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய போது அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

புதிய சம்பளக் கொடுப்பனவை அமுல் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதே சமயம் சங்கத்தின் எதிர்காலம் அதன் வளர்ச்சி கருதி சகல பணியாளர்களும் வியாபார நடவடிக்கையை மேன்மேலும் உயர்த்துவது அவசியமானது என்றும் சங்கத் தலைவர் அங்கு வலியுறுத்திக் கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

விடுமுறை நாள்களையும் பொருட்படுத்தாது சங்கக் கடைகளைத் திறந்து மக்களுக்குச் சேவையாற்ற பணியாளர்கள் முன்வர வேண்டும்.

இந்த நடவடிக்கையால் சங்கங்கள் வியாபார ரீதியில் நன்மையடைய வாய்ப்புண்டு என்றார்.

பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தியும் உரையாற்றினார்.

இறுதியில் பணியாளர்களுக்குப் புத்தாண்டு கைவிஷேசம் வழங்கப்பட்டது.

(ஐ-17)

# கலாசாரப் பேரவை அமைப்பதற்கான பொதுக்கூட்டம்

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கலாசார பேரவை ஒன்றை அமைப்பதற்கான பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் நா.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம-8)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் கடந்த 13 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (177777ஏ) | (177777பி) | (181948ஏ) |
| (182051ஏ) | (182051பி) | (182051சி) |
| (184541ஏ) | (184599ஏ) | (184599பி) |
| (184599சி) | (184599டி) | (184599ஈ) |
| (184740ஏ) | (185980ஏ) | (185980பி) |
| (185998ஏ) | (185998பி) | (186084ஏ) |
| (186084பி) | (186136ஏ) | (186136பி) |
| (186136சி) | (186176ஏ) | (186176பி) |
| (186176சி) | (186234ஏ) | (188727ஏ) |
| (188727பி) | (188999ஏ) | (189015ஏ) |
| (189015பி) | (189021ஏ) | (189059ஏ) |
| (189061ஏ) | (189093ஏ) | (189101ஏ) |
| (189123ஏ) | (189124ஏ) | (189127ஏ) |
| (189127பி) | (189127சி) | (189127டி) |
| (189132ஏ) | (189157ஏ) | (189167ஏ) |
| (189167பி) | (189186ஏ) | (189186பி) |
| (189215ஏ) | (189215பி) | (189240ஏ) |
| (189249ஏ) | (189249பி) | (189249சி) |
| (189249டி) | (189249ஈ) | (189277ஏ) |
| (189281ஏ) | (189603ஏ) | (189603பி) |
| (190751ஏ) | (190804ஏ) | |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (184074ஏ) | (184074பி) | (186313ஏ) |
| (188869ஏ) | (188869பி) | (188869சி) |
| (188869டி) | (189074சி) | (189074டி) |
| (189082ஏ) | (189082பி) | (189089ஏ) |
| (189109ஏ) | (189109பி) | (189109சி) |
| (189109டி) | (189120ஏ) | (189120பி) |
| (189144ஏ) | (189144பி) | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (173523ஏ) | (173523பி) | (180119ஏ) |
| (185934ஏ) | (185934பி) | (186086ஏ) |
| (186086பி) | (186086சி) | (186086டி) |
| (186089ஏ) | (186089பி) | (186102ஏ) |
| (186102பி) | (186102சி) | (186242ஏ) |
| (186242பி) | (186281ஏ) | (186281பி) |
| (186325ஏ) | (186325பி) | (186325சி) |
| (186325டி) | (186325ஈ) | (186325எவ்) |
| (188837ஏ) | (188900ஏ) | (188931ஏ) |
| (188931பி) | (188988ஏ) | (189062ஏ) |
| (189086ஏ) | (189086பி) | (189086சி) |
| (189091ஏ) | (189122ஏ) | (189132பி) |
| (189132சி) | (189194ஏ) | (189194பி) |
| (189235ஏ) | | |

இம்மாதம் 16ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் விவரம் வருமாறு:

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (168631ஏ) | (184708ஏ) | (188288ஏ) |
| (188939ஏ) | (188963ஏ) | (189065ஏ) |
| (189124ஏ) | (189137ஏ) | (189137பி) |
| (189223ஏ) | (189264ஏ) | (189276ஏ) |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (184441ஏ) | (184441பி) | (185828ஏ) |
| (185828பி) | (185828சி) | (185828டி) |
| (186099ஏ) | (188912ஏ) | (188912பி) |
| (189061ஏ) | (189088ஏ) | (189088பி) |
| (189110ஏ) | (189110பி) | (189114ஏ) |
| (189114பி) | (189143ஏ) | (189234ஏ) |
| (189286ஏ) | (190795ஏ) | |

(ம)

# ரணில் அடுத்த வாரம் நாடு திரும்புவார்

நோர்வேக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் நாடுதிரும்புவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சனைக்கு பேச்சு மூலம் அரசியல் தீர்வுகாணும் அரசின் முயற்சி குறித்து கலந்துரையாடுவதற்காக நோர்வே அரசு விடுத்த அழைப்பை அடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் அங்கு சென்றுள்ளதாகவும் கூறப்பட்டது.

நோர்வே விஜயத்தை முடித்துக் கொண்டு வேறு சில ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர் விஜயம் செய்ய உள்ளார். அவற்றை எல்லாம் முடித்துக் கொண்டு அடுத்த வாரம் அவர் நாடு திரும்புவார்.

(ம)

### குடாநாட்டுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி

# விஸ்வரூபம் எடுத்து நிற்கும் பாதீனியம் களை; அழிப்பதற்கு முழுமூச்சான முயற்சிகள் தேவை

**போா** அரக்கனின் கோரப்பிடியில் சிக்கி சிதைந்து போயிருக்கும் யாழ்.குடாநாட்டில் மேலும் பேரழிவினை ஏற்படுத்தும் விதத்தில் பாதீனியம் களை அதிவேகமாகப் பரவி வருகிறது.

இந்திய அமைதிப்படையின் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த பாதீனியத்தை அழிப்பதற்கு பல மட்டங்களில் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டன. எனினும் அதன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

## அழிக்க அழிக்க வேகத்துடன் பரவுகிறது

உலகளாவிய ரீதியில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள பாதீனியம் களை இலங்கையில் 25க்கும் மேற்பட்ட இடங்களில் காணப்படுவதாக ஆரம்ப ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் கடந்த 18 வருடங்களாக பாதீனியம் களையை அழிப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் போராடிவருகின்றது. ஆனால் அதனை அழிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா, தென்அமெரிக்கா, வட அமெரிக்கா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, மடகஸ்கார் தீவு, வியட்நாம், பங்களாதேஷ், நேபாளம், தாய்வான் உட்பட பல நாடுகளில் பாதீனியம் பரவி உள்ளது. அந்த நாடுகளுக்கு இது பெரும் அச்சுறுத்தலாகவும் உள்ளது. தற்பொழுது யாழ்ப்பாணத்துக்கும் இதனால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளது.

கடந்த வருட இறுதியில் யாழ். மாவட்டத்தில் 20 ஹெக்டேயர் பரப்பில் பரவி இருந்த பாதீனியம் களை கடந்த நான்கு மாத காலத்தில் 46.5 ஹெக்டேயர் நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளது.

பாதீனியத்தை அழிக்கும் பொருட்டு கடந்த வருட இறுதிப் பகுதியில் விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைத் திணைக்களம் போன்றவை இணைந்து 'பாதீனியம் ஒழிப்பு வாரம்' ஒன்றைப் பிரகடனம் செய்தன.

குறிப்பிட்ட அந்த வாரத்தில் மாவட்டத்திலுள்ள விவசாய சம்மேளனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் உதவியுடன் பாதீனியம் களை மண்வெட்டிகளினால் வெட்டப்பட்டும் கிருமிநாசனி விசிறப்பட்டும் அழிக்கப்பட்டன.

வெட்ட வெட்டத் தளைப்பது போல அழிக்க அழிக்க பாதீனியம் வளர்ந்து கொண்டே வருகிறது. புத்தூர், நவக்கிரி, சிறுப்பிட்டி, ஆவரங்கால், கோப்பாய், உரும்பிராய், மருதனார்மடம், உடுவில், ஈவினை, புன்னாலைக்கட்டுவன் என பல இடங்களையும் இந்தக் களை தற்போது முழு அளவில் ஆக்கிரமித்துள்ளது.

### கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 20 ஹெக்டேயர் நிலப்பரப்பில் ஆக்கிரமிப்பு

கோப்பாய் - கைதடி வீதியில் தெருவின் இரு மருங்கிலும் இப்பொழுது பாதீனியம் களை புதிதாக முளைத்து வருவதை அவதானிக்க முடிகிறது.

#### செய்தி மடல்

இதனை விட பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் பாதீனியம் களை வளர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயிர்ச் செய்கைக்கு பெரும் சவாலாக விளங்கும் இந்தக் களையைக் கட்டுப்படுத்துவதில் விவசாயிகள் மட்டுமல்ல அனைத்துப் பொதுமக்களும் அக்கறை காட்டவேண்டியது மிக அவசியமாகும் என்று விவசாயத் திணைக்களம் வலியுறுத்தி வருகின்றது.

பாதீனியம் களையில் அடங்கியுள்ள இரசாயனப்பொருள் மண்ணில் சேருவதனால் விவசாயப் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் இதனால் விளைச்சல் 30 வீதம் முதல் 40 வீதம் வரை குறையலாம் என்றும் மேற்படி திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்தக் களையிலுடைய பூவிலிருக்கும் மகரந்த மணிகள் ஏனைய பயிர்களின் கருக்கட்டலையும், காய் உருவாகுதலையும் தடைசெய்கின்றன.

பாதீனியத்தின் மயிர்கள்கொண்ட தண்டு, இலை என்பன மனிதர்களில் படுவதால் ஒவ்வாமை நோய் எற்படுவதுடன் இதன் மகரந்த மணிகளால் சுவாசத் தொகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டுப் பயிர்களிலேயே அல்லது தோட்டங்களில் பாதீனியக்களை காணப்பட்டால் அதனை அழிக்கத் தவறுவது தண்டனைக்குரிய குற்றம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. பாதீனியத்தை அழிக்காதோருக்கு ஒன்றுமுதல் ஆறு மாதங்கள் வரையான சிறைவாசம் அல்லது ஒரு லட்சம் ரூபாவரையான தண்டம் என்பன விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் களையைக் கட்டுப்படுத்துவதற்கு அதில் பூக்கள் உருவாவதற்கு முன்னரே கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

#### கேசரி

இளம் பருவத்திலேயே இதனை வேருடன் பிடுங்கி அழித்துவிட வேண்டும் என்றும், கிளைபோசெட் களை நாசனியை ஒன்றரை அவுன்ஸை ஒரு கலன் நீரில் கலந்து தாவரம் நன்கு நனையும் வரை விசிற வேண்டும் என்றும் நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அழிக்க அழிக்க பெருகிவரும் பாதீனியம் களையை பூண்டோடு அழிப்பதற்கு மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைவரும் அணிதிரள வேண்டியது அவசியம்.

விவசாய நிறுவனங்கள் மட்டும் பாதீனியம் அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டால் போதாது யாழ்.குடா நாட்டிலுள்ள அனைத்து அமைப்புகளும் பாதீனியத்துக்கு எதிராக போராட வேண்டும்.

பாதீனியம் தேசவிரோதக் களை என்பதனை உணர்ந்து அதனை அழிப்பதில் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பங்களிப்பு நல்க வேண்டும்.

★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

உயரப்புலம் இளவாலையைச் சேர்ந்த தங்கராசா சிவநந்தன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0905024499) யாழ். ஆஸ்பத்திரிக்கும் யாழ். பஸ்நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இளவாலை பஸ்ஸில் கொடுத்து இளவாலைப் பொலீஸில் ஒப்படைக்கச் சொல்லவும். அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் ஒப்படைக்கவும். (86746)

37, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் தவநாயகி என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (இல. 0901010547), ஒருதொகைப் பணமும் பெரியகடைவீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (பிள்ளையார் விலாசிற்கு அருகில்) (86742)

திருமதி மனோன்மணி முருகையா என்பவரது தேசிய அ.அட்டை (இல.557552626V), விசேட அ.அட்டை, பெறுமதிமிக்க பொருள்கள் என்பன 12.04.2001 அன்று தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் பஸ்ஸில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ரானிஜா புடைவையகம், மானிப்பாய் (சந்தைக்கு முன்பாக) எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (86736)

செல்வி பேபிராணி மாணிக்கம் என்பவரது தேசிய.அ.அ. (இல. 725721749V), விசேட.அ.அ. (இல.0903005942), சிறுதொகைப் பணம் என்பன கடந்த 10.04.2001 அன்று பிரதானவீதி, உரும்பிராய்ச் சந்திக்கும் அச்செழுவுக்கும் இடையில் கைப்பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கு.பகீரதன் வயாவிளான் ம.ம.வி. உரும்பிராயில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/16332)

## விற்பனைக்கு

பெல்ஜியம் கண்ணாடி பதிக்கப்பட்ட தேக்கம் அலுமாரியும், கட்டிலும (டபிள்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- சின்னத்துரை, சொர்ணவடலிப் பிள்ளையார் கோயிலடி, கொக்குவில் மேற்கு. **T.P. 2344** (86719)

நல்ல நிலையிலுள்ள ரேடியோ லைன்(**RL**) தொலைபேசிகள் இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஜ.மகேந்திரம், ஊரெழு கிழக்கு, ஊரெழு. (86709)

நல்ல நிலையில் உள்ள டீ பிறீஷர் **(D FREEZAR)** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கண்ணா, 381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86605)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம் மற்றும் லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை, பச்சை, நீலம்) விற்பனைக்கு உண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (86507)

புறொயிலர், கல்பேட், சேவல் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (86753)

## வாடகைக்கு

802, பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் கடை ஒன்று வாடகைக்குண்டு. தொடர்பு:- மு.உருத்திரானந்தா, 802, பலாலி வீதி, திருநெல்வேலி. **T.P. 2732** (86729)

## வீடு விற்பனைக்கு

மாரியம்மன் ஒழுங்கை, திருநெல்வேலியில் 3 அறைகள் கொண்ட சகல வசதிகளும் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு (தளபாடங்கள உட்பட). தொடர்பு:- சண்முகலிங்கம், 122/5, ஆனைப்பந்தி ஒழுங்கை, ஆனைப்பந்தி. (86725)

## தவறிவிட்டது

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிவபாதம் ஜெயமாலா என்பவரது தேசிய அ.அட்டை(628231826v), விசேட அ.அட்டை என்பன அடங்கிய கைப்பை 13-04-2001 அன்று யாழ். பெரியகடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சு.தயாபரன், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம். (86723)

செல்வி **Dr.K.**செந்தில்மணிதேவி என்பவருடய தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை, திறப்புக்கோர்வை என்பன கஸ்தூரியார் வீதிக்கும், பஸ் நிலையத்துக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 40/1, சித்த வைத்தியசாலை, மக்கள் பேற்று நிலையம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86727)

தங்கக் கைச்சங்கிலி ஒன்று கந்தரோடை வீதியில் கதிரமலை சிவன் கோயிலுக்கும் கந்தரோடைப் பாடசாலைக்கும் இடையில் கடந்த 14-04-2001 இல் தவறிவிட்டது. கண்டெடுததவர்கள் தயவுசெய்து தி.சிவநாதன், ஸ்ரேசன் றோட், சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86715)

# தமிழ்க் காங்கிரஸ் கட்சிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்18

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்.மாவட்டத்துக்கான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொக்குவில் கிழக்கில் உள்ள கருவேலடி ஒழுங்கையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கட்சியின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (ம-10)

# குருநகர் டேவிட் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

அரியாலை,ஏப்.18

குருநகர் டேவிட் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை இப்பகுதி மக்கள் ஈ.பி.டி.பிக் கட்சியின் யாழ்.அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

கடந்தபல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியை, புனரமைத்துத் தருமாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 28 - 08 - 1928



உதிர்வு 17 - 03 - 2001

## திருமதி அருணாசலம் அமிர்தாம்பிகை

(அருமை)

(புலோப்பளை,பளை)

**அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து**
**வையத்துள் வாழ்வாங்கு வாழ நல்வழிகாட்டிய**
**எம் அருமைத்தாயே!**
**நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்**
**உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டுப் பிரியாது.**
**எமது அன்புத் தெய்வத்துக்கு எமது இதய அஞ்சலிகள்.**

இன்று (18-04-2001) புதன்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உம் பிரிவால் துயருறும்:*
**பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*துன்னாலை வடக்கு, துன்னாலை.* (86677)


இதோ! யாழ்.மக்களுக்கு ஒரு நற்செய்தி!

மங்களகரமான திறப்பு விழா

இலொயலாஸ் கல்யாண மண்டபம்







LOYOLAS WEDDING HALL

யாழ்நகரில் அனைத்து வசதிகளையும் கொண்ட நவீன வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட "லொயலாஸ் கல்யாண மண்டபம்" இன்று (18-04-2001) புதன்கிழமை முதல் மக்களுக்குச் சேவை புரியவென குதூகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை மகிழ்வுடன் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

- மங்களகரமான நிகழ்வுகள்
- அரங்கேற்றங்கள்
- இன்னிசை நிகழ்வுகள்
- நாடகங்கள், கூட்டங்கள்

போன்ற நிகழ்வுகளுக்குப் பலநூறுபேரை உள்ளடக்கக் கூடியது

- மணமக்களுக்குத் தேவையான அலங்காரப் பொருள்கள்
- வைபவங்களுக்குத் தேவையான சொக்கட்டான் பந்தல், நவீன கதிரை வகைகள், மணவறைகள் மற்றும் தேவையான அனைத்துப் பொருள்களும்
- சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள், உணவுவகைகள்
- வீடியோ, போட்டோ வசதிகள்
- திருமணக்கார், குளிரூட்டப்பட்ட பஸ் போன்ற வசதிகள்

இவைபோன்ற அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் பெற்று உங்கள் விழாக்களைச் சிறப்பாக நடத்துவதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரேயொரு நிறுவனம்

லொயலாஸ் கல்யாண மண்டபம்

"எங்கள் சேவை உங்கள் தேவைக்கே"

இல. 59, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (பத்திரிசியார் கல்லூரி முன்பாக) T.P.: 021-3352, 021-2110

திரு.டேவிற் அலெக்ஸ்ஷாண்டர் உரிமையாளர் "லொயலாஸ்"

(86721)

## கண்ணீர் அஞ்சலி

### தம்பிப்பிள்ளை தெய்வானை

லீலா பேக்ஹவுஸ் உரிமையாளரும், நண்பருமாகிய

**திரு. த. சிவசுப்பிரமணியம்**

அவர்களின் தாயார் தம்பிப்பிள்ளை தெய்வானையின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

உ லிங்கில் ஸ்ரார்,
சிற்ஸ் அன் பினான்ஸ்,
அமுல் கிறீம் ஹவுஸ் அன் பேக்கரி.

(சி/16350)

## விண்ணப்ப முடிவுதிகதி மாற்றம்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 30 ஆண்டுகள் நிறைவையும் நெற்கொழு விளையாட்டு மைதானத்தின் 50 ஆண்டுகள் பூர்த்தியையும் முன்னிட்டு பருத்தித்துறை, உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்படும் யாழ்ப்பான மாவட்ட பாடசாலைகள், கழகங்களுக்கிடையிலான விலக்கல் முறையிலான மாபெரும் சுற்றுப் போட்டிகளின் திகதியை கால நீடிப்புச் செய்தல்.

மேற்படி சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதியில் கல்லூரிகள் விடுமுறையாக இருப்பதாலும், புது வருடப்பிறப்பினை முன்னிட்டான பொது விடுமுறைகள் அமைந்தமையாலும் விண்ணப்ப முடிவு திகதியை 16-05-2001 ஆம் திகதி வரையில் மேலும் ஒரு மாத காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எம். கே. சிவாஜிலிங்கம், ஜே. பி. யூ. எம்.
நகரமுதல்வர்
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்றப் பணிமனை,
வல்வெட்டித்துறை,
16-04-2001 (16349)

உ

மேலைப்புலோலி

## சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை

அவர்களின்

## 94 ஆவது நினைவுப் பெருவிழா - 2001

காலம்- 20 - 04 - 2001 வெள்ளிக்கிழமை
பி. ப. 4.00 மணி

இடம்- சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலைய முன்றில்

தலைவர்- திரு. ந. தங்கராசா
(நிலையத் தலைவர்)

பிரதம விருந்தினர்- திரு. பா. சுப்பிரமணியம்
மாவட்ட நீதிவான், மல்லாகம்

சிறப்பு விருந்தினர்கள்-

திரு. மு. தருமலிங்கம்
செயலாளர், லயன்ஸ் கழகம், வடமராட்சி.

திரு. நா. சோதிநாதன்
மதுவரிப் பொறுப்பாளர், யாழ்ப்பாணம்

① பாராட்டிக் கௌரவித்தல்
மணிவிழாக் காணும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தல்

② சிறப்புச் சொற்பொழிவு
'நாளை நமதே'
திரு. மு. திருநாவுக்கரசு (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)

சதாவதானி கதிரைவேற்பிள்ளையின்
சமூகப்பார்வை
திரு. ப. செல்வநாயகம் (ஆசிரியர்)

③ பரிசில்கள் வழங்கல்
சதாவதானி குருபூசை தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கல்.

④ கலைநிகழ்ச்சி
யாழ். பல்கலைக்கழக — இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களும், திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் அவர்களின் மாணவர்களும் இணைந்து வழங்கும்

'உதயனைத் தடுத்த உத்தமி' (நாட்டிய நாடகம்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

- செயலாளர்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்
மேலைப் புலோலி, பருத்தித்துறை.

விழா சிறப்புற வாழ்த்துவோர்;

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்,
பஸ் நிலையம், பருத்தித்துறை.

(86756)

### திருநாவுக்கரசுநாயனார் குரு பூசை தினம்

சுழிபுரம், ஏப். 18

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினம் நாளை வியாழக்கிழமை வழக்கம் பறை அம்பாள் ஆலயத்தில் நண்பகல், புராணபடனம் பூசை வழிபாடுகளுடன் நடைபெறும்.

பிற்பகலில் சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயத்தில் பண்டிதர் இ. பொன்னம்பலவாணர் தலைமையில் புராணபடனம், திருமுறை ஓதல், பூசை வழிபாடுகள் என்பன நடைபெறும்.

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் பிற்பகல் 4.00 மணி முதல் அப்பர் அருளிய திருமுறைகள் பக்தியோடு பாடப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெறும். (ம-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 18

சங்கானை கிழக்கு கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறும். விசேடபூசை, ஆராதனைகளுடன் திருநாவுக்கரசர் தேவாரப் பண்ணிசையும் இடம்பெறும். (ம)

### விளக்கமறியல் நீடிப்பு

தென்மராட்சி, ஏப். 18

மிருசுவில் புதைகுழி மரணங்கள் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 14 படைச் சிப்பாய்களும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றுக்கு கொண்டுவரப்பட்டனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை மிருசுவில் ஒட்டுவெளி வாய்க்கால் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட சிப்பாயின் மரணம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சிப்பாய்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-117)

### புகையிலையை உலர்த்த முடியாது பாதிப்பு

வடமராட்சி, ஏப். 18

கடந்த சில தினங்களாக அடிக்கடி மழைபெய்து வருவதனால் வடமராட்சிப் பகுதியில் புகையிலை உலர்த்துவோர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடை செய்யப்பட்ட புகையிலையை வெயிலில் காயப்போட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அவை அழுகிப் பழுதடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகப் புகையிலை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (ம-173)

### சைக்கிள் உரிமத்தகடு வழங்க நடமாடும் சேவை

வடமராட்சி, ஏப். 18

சைக்கிள் உரிமத்தகடுகளை விநியோகிப்பதற்காக பருத்தித்துறை பிரதேச சபை, நடமாடும் சேவையினை ஆரம்பித்துள்ளது.

சபையின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் தோறும் சபை உத்தியோகத்தர்கள் சென்று அப்பகுதியில் உள்ள சைக்கிள் உரிமையாளர்களுக்கு உரிமத் தகடுகளை விநியோகம் செய்து வருகின்றனர்.

இந்த நடமாடும் சேவை இன்று புதன்கிழமை தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ம-173)

## வாழ்த்து - பிரார்த்தனை

எமது ஊர்ப் பிரமுகரும், பல சங்கங்கள், சபைகளில் முக்கிய பதவிகளை வகித்து வருபவருமான சமாதான நீதிவான்

### திரு. ச. ஏகாம்பரநாதன் அவர்கள்

வலி. கிழக்கு தென் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பதவியைச் சமீபத்தில் ஏற்றுக் கொண்டதையிட்டு, மனமார வாழ்த்துகின்றோம்.

குறித்த பதவிகள் மூலம் அவரது பணிகள் மேலும் சிறப்படைய அருளும் வண்ணம் கற்பகவிநாயகர் பொற்பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் இ. நடராசா,
(ஓய்வு பெற்ற பிரதம பொறியியலாளர்)

லயன் த. திருநாவுக்கரசு.
(ஓய்வு பெற்ற அதிபர்)

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (86763)

### யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

பழைய மாணவர் சங்க

## வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

மேற்படி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலும் பொதுக் கூட்டமும் எதிர்வரும் (22. 04. 2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் வழமை போல் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர் தலைவர்
பழைய மாணவர் சங்கம்,
ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

(86771)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

சிவதர்சினி பாலசுப்பிரமணியம்

அவர்களின் அன்புத் தந்தையார்

### க. பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவையிட்டு மனம் வருந்துகின்றோம் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

13 A கலைப் பிரிவு மாணவிகள்,
(86764) யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## துயர் பகிர்கின்றோம்

பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிதி உதவியாளராகக் கடமையாற்றும்

திரு. த. பாலகிட்ணபிள்ளை அவர்களின்
அன்புத் தந்தையார்

### க. தம்பையா

அவர்கள் 13--04--2001 இல் மரணமான செய்தி கேட்டு அவர்கள் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
பளை. (86766)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனப் பங்காளர்

திரு. த. சிவசுப்பிரமணியம்

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தம்பிப்பிள்ளை தெய்வானை

அவர்களின் மறைவையிட்டு துயருறுகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்காளர்களும், பணியாளர்களும்,
எஸ்.ஜே.அன்.பி ரேட் ஏஜென்ஸி

39, 3 ஆம் குறுக்குத் தெரு,
(86755) யாழ்ப்பாணம்.

## வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டித்து
# ஜனாதிபதிக்கு கிழக்குப் பெண்கள்
# 10 ஆயிரம் தபால் அட்டைகள்

கொழும்பு, ஏப். 18
மன்னாரில் கைது செய்யப்பட்ட இரு குடும்பப் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், அது தொடர்பாக நீதியான விசாரணை ஒன்றை நடத்தக் கோரியும் கிழக்கு மாகாணத்தில் உள்ள பெண்கள் அமைப்புகள் 10 ஆயிரம் தபாலட்டைகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வருகின்றன.

மட்டக்களப்பு சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு வருகின்றன.

இதுவரை 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட தபால் அட்டைகள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டு விட்டதாக சூர்யா பெண்கள் நிலைய ஆலோசகர் சட்டத்தரணி எம். மங்களேஸ்வரி தெரிவித்தார்.

கிழக்கு பெண்கள் அரச சார்பற்ற கூட்டமைப்பே தபாலட்டைகளை ஒழுங்குபடுத்தி ஜனாதிபதிக்கு அனுப்பி வருகின்றது.

[ம]

## தற்காலிக வகுப்பறை அமைக்கும் பணி பூர்த்தி அடையும் நிலையில்

தென்மராட்சி, ஏப். 18
புலோலி தேவாலயமொன்றில் இயங்கும் பளை மத்திய கல்லூரிக்கும், வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலைக்குமென இரண்டு தற்காலிக வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கும் வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்த வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன.

பாடசாலைகளுக்கான தளபாடங்கள் கிடைத்ததும் புதிய கட்டடத்தில் வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் வேண்டுகோளை அடுத்து பளைப் பகுதியில் உள்ள ஆறு பாடசாலைகளுக்கு தற்காலிகக் கொட்டகைகள் அமைக்க வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பத்து லட்சம் ரூபாவினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)

## வட்டு. மத்திய கல்லூரியில் 3 நாள் பவளவிழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 18
வட்டு. மத்திய கல்லூரியின் பவள விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைமுதல் மூன்று தினங்கள் நடைபெற உள்ளன.

முதல் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு எம். எஸ். இராசரத்தினம் அரங்கில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் வீ. இராசையாவும், சிறப்பு விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசாவும் கலந்து கொள்வர்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளும், வாழ்த்துரைகளை போரூட் நிறுவன யாழ். நிலைய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மாவன் பிறன்னெஸ், இந்து வாலிபர் சங்கத் தலைவர் கே. வரப்பிரதன் ஆகியோர் நிகழ்த்துவர். 'மனித மேம்பாடும் ஆத்மீகமும்' என்ற தலைப்பில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

பவளவிழா மலரும் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்படும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மணியவாத்தியார் அரங்கில் இடம்பெறும்.

இரண்டாவது நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி அ. சண்முகதாஸ் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதனும் கலந்துகொள்வர்.

தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர். அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆசியுரை வழங்குவார். சங்கானையின் முன்னாள் பிரதேச செயலர் க. சந்திரராஜா, மிருசுவில் றோ. க. த. க வித்தியாலய அதிபர் எவ். எக்ஸ். அன்ரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். 'சமகாலக் கல்விச் செல் நெறிகள்' என்ற தலைப்பில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சிவவாகீசர் அரங்கில் நடைபெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையாவும் கலந்து கொள்வர்.

தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்குவார். இளைப்பாறிய உப அதிபர் ச. பெரியதம்பி வாழ்த்துரை வழங்குவார். 'ஈழத்திற் தமிழர் பண்பாட்டுப பாரம்பரியம்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் நினைவுப் பேருரை நிகழ்த்துவார் (ம)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 18
நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்தமஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 5.30 மணிக்கு மகாபாரதம் என்ற பொருளில் பிரம்ம ஸ்ரீ. சிவ. வை. நித்தியானந்தசர்மாவின் தெய்வீகத் தொடர் சொற்பொழிவு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

(—17)

## கைதடியில் மீண்டும் அஞ்சல் அலுவலகம்

தென்மராட்சி, ஏப். 18
கைதடிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதால் சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப அலுவலகமும், கைதடி அஞ்சல் அலுவலகமும் அங்கு இயங்கத் தொடங்கியுள்ளன.

கைதடி உப அலுவலகம் சொந்தக் கட்டடத்திலும், அஞ்சல் அலுவலகம் தனியார் வீடொன்றிலும் இயங்க ஆரம்பித்துள்ளன.

இரண்டாம் தவணையுடன் இப்பகுதியில் உள்ள பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதையடுத்து பாடசாலை வளவுகள் துப்புரவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

## அனுமதி அட்டைகளை பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏ . 18
வட இலங்கை சங்கீத சபையால் நடத்தப்படும் சங்கீதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் தத்தது அனுமதிஅட்டைகளை நாளை வியாழக்கிழமைக்குள் கல்லூரி அலுவலகத்தில் பெற்று பரீட்சைக்குத் தோற்றுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

(ஒ)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 18
தரம்—3 ஆங்கில பாடத்துக்கான புதிய கல்விச் சீர்திருத்த செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணிக்கு யாழ். கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலய பாடசாலைகளில் தற்பொழுது தரம் 3இல் ஆங்கிலம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(3-5-10)

## லண்டனில் நடந்த விபத்தில் துன்னாலை இளைஞர் பலி

பெரிய வெள்ளி தினத்தில் லண்டனில் ஏற்பட்ட விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். வவுனியாவைச் சேர்ந்த மற்றுமொருவர் காயமடைந்தார்.

துன்னாலையைச் சேர்ந்த குலவீரசிங்கராஜா சசிகரன் (வயது 24) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார். வவுனியாவைச் சேர்ந்த ஜீவன் என்பவர் காயமடைந்தார். உயிரிழந்தவரின் சடலத்தை இலங்கைக்கு எடுத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெரியவெள்ளி தின ஆராதனைகளுக்காக லண்டனிலிருந்து வேல்ஸுக்குச்சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

3 கார்களில் 15 தமிழ் இளைஞர்கள் தேவாலயம் நோக்கிச் சென்றதாகவும் அவற்றில் ஒரு கார் மிக வேகமாகச் சென்றதால் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாகவும் கூறப்பட்டது. (ம)

## நிவாரண விநியோகம்

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம் பெயர்ந்தோருக்கான ஏப்ரல் மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்களை சங்கத்தின் கிளைகளனூடாக விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

(3-17)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஏப். 18
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே. ஸி. ஸி ஸி. வெற்றிக்கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளை வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் கே. ஸி. ஸி. ஸி. 'பி' அணியும் யங்ஸ்ரார் வி. க. அணியும் மோதுகின்றன.

(3-86)

★ ★ ★

வலிவடக்கு, ஏப். 18
நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களிடையேயான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில்நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3—00 மணிக்கு திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலைய விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு:

★ நல்லூர் மக்கள் ச. ச. நிலைய அணி எதிர் திருநெல்வேலி மகாத்மாஜி ச. ச. நி. 'ஏ' அணி.

★ கோண்டாவில் வளர்பிறை ச. ச நிலைய அணி எதிர் கொக்குவில் ஸ்ரீவராகி ச. ச. நிலைய அணி.

★ திருநெல்வேலி மகாத்மாஜி ச. ச. நிலைய 'பி' அணி எதிர் கொக்குவில் மேற்கு ச. ச. நிலைய அணி.

(3-86)

★ ★ ★

யாழ். மாவட்டப்பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை வியாழக்கிழமை இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபெற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

★ முற்பகல் 8-00 மணி — 17 வயது — யாழ் மத்திய கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

★ 19 வயது — யாழ்ப்பாண வலய முதல் அணி எதிர் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

★ 19 வயது — சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாண வலய இரண்டாம் அணி.

**யாழ். சென்ரல்**

★ முற்பகல் 8-30 மணி — 17 வயது — நடராஜ ராமலிங்க வித்தியாலயம் எதிர் நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம்.

★ 19 வயது — ஹாட்லிக் கல்லூரி எதிர் நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம்.

★ 17 வயது — யாழ். மத்திய கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி.

★ முற்பகல் 11-00 மணி— 17 வயது — சந்திரபுரஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம்.

★ யூனியன் கல்லூரி எதிர் நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம். (3)

★ ★ ★

யாழ். வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8-30 மணிக்குக் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்த முன்னர் ஏற்பாடாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட முதல் நிலைச் சுற்றுப்போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

வலய மட்டத்தில் 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற அனைத்து அணிகளும் இந்தச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-3)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமை புரியும்
செல்வி சுகந்தினி குககுமாரராஜா
அவர்களின் அன்புத் தநதையார்
**கனகசபை குககுமாரராஜா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
தீவக வலயக் கல்வித் திணைக்களம்.
(86780)



## மரண அறிவித்தல்

**திருமதி தவராஜா சாருகாஜினி (யோகா)**

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராஜா சாருகாஜினி 16-04-2001 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் தவராஜாவின் அன்பு மனைவியும் ஆர்த்திகா (ஜேர்மனி) வின் பாசமிகு தாயாரும் மகாலிங்கம் - விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா இரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும், அளவெட்டி வடக்கு வே. இளையதம்பியின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தகவல்:
த. ஞானசேகரம் (மைத்துனர்)
சண்டிலிப்பாய் வடக்கு,
(86772)

# கண்ணீர் அஞ்சலி

சமதர்மக் கொள்கையை தாரக மந்திரமாகக் கொண்டு,
அவ்வழியே இறுதிவரை வாழ்ந்திட்ட செம்மலும்,
பிரபல கலை இலக்கிய வாதியும், பத்திரிகையாளருமான

**அமரர் வீ.சின்னத்தம்பி**
**(பாரதிநேசன்)**

அவர்களின் மறைவையிட்டு எமது இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அமரரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் உறவினர்களின் துயரத்திலும் பங்குகொள்கிறோம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
**யாழ்ப்பாணம் - கொழும்பு.**

(C/16358)

# கண்ணீர் அஞ்சலி


எமது ஆசிரியையான
**செல்வி றோ.கிறிஸ்ரோபரின் (ஞானேஸ் பீட்டர்)**
தாயாரான
**திருமதி மக்டலின் கிறிஸ்ரோபர்**

மரணமான செய்தி கேட்டு வருந்துகின்றோம்.
அன்னாரின் மறைவை ஒட்டி அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உ.நிரோஷன்
உ.நிவேதிகா
உ.விதுஷன்

*77/2, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/16357)

# 35ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
10
-
03
-
1915

உதிர்வு
15
-
03
-
2001

## அமரர் சந்திரசேகரம் சதாசிவம்

அன்பும் பண்பும் பாசமும் தந்து
எங்களுக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

**இன்று (18.04.2001) புதன்கிழமை நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

நிரந்தர முகவரி:
*கச்சாய் வீதி, கொடிகாமம்.*
தற்காலிக முகவரி:
*சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.*

**-குடும்பத்தினர்.**
(86785)

# துயர்பகிர்வும் அஞ்சலியும்

**அமரர் வீ.சின்னத்தம்பி அவர்கள்**

(மூத்த பத்திரிகையாளர்; பவளவிழா மலராசிரியர் வட்டு.மத்திய கல்லூரி)

**அன்னாரின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த மனவேதனையும் அதிர்ச்சியுமடைகின்றோம். அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் எமது துயரைப் பகிர்ந்து கொள்வதோடு எமது அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**வட்டு.மத்திய கல்லூரி**
**பவளவிழாச் சபை.**
(86774)

## போர் ஓய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையான அத்திவாரத்தை இடும் அவசியமான, ஆக்க பூர்வமான நடவடிக்கையாகவே இதனைப் பார்க்க வேண்டும்.

### வேண்டுகோளாகப் பார்க்க வேண்டும்

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை ஸ்ரீலங்கா அரசு நீக்கிவிட வேண்டும் என்ற பிரச்சினையை நாம் பல தடைவைகள் எழுப்பியிருக்கிறோம். சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னதாக இத்தடையை நீக்குவது அவசியமென நான் சொல்ஹெய்மிற்கு சொல்லி வந்திருக்கிறேன். பகிரங்க மேடைப் பேச்சுக்களிலும் பத்திரிகைப் பேட்டிகளிலும் இதனை நான் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். இதனை முன் நிபந்தனையாகக் கருதக்கூடாது. ஒரு வேண்டுகோளாகவே பார்க்கலாம்.

தமிழீழ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டபூர்வமான அமைப்பாக எமது இயக்கத்தை ஏற்றுக் கொள்ள நாம் விடுக்கும் ஒரு வேண்டுகோளாக, ஓர் அழைப்பாகக் கருத வேண்டும்.

### தீர்வும் சட்டவிரோதமாகிவிடும்

நிரந்தரமான அரசியல் தீர்வு காணும் நோக்கத்துடன் எம்முடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்த ஸ்ரீலங்கா அரசு விரும்புமானால், எமது மக்களின் உண்மையான, அதிகார பூர்வமான பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளுக்குச் சட்டபூர்வமான அரசியல அந்தஸ்து வழங்கப்படுவது அவசியமாகும். தடைசெய்யப்பட்ட, சட்ட விரோதமான ஓர் அமைப்பாக நாம் பேச்சுக்களில் பங்குபற்றினால் அப் பேச்சுக்களின் பயனாகப் பெறப்படும் அரசியல் தீர்வும் சட்டவிரோதமான ஒரு பொருளாகவே கருதப்படும்.

ஆகவே இப்படியான பேச்சுக்கள் ஒரு நிரந்தரத் தீர்வுக்கு ஆதாரமாக அமைந்துவிடப் போவதில்லை. எனவே தான், எமது விடுதலை இயக்கம் எமது மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் பேச்சுக்களின் சமத்துவமான தகைமையுடன் பங்கு கொள்வதே சாலச்சிறந்தது.

### நீண்டகாலமாக வாதாடி வருகிறோம்

சமாதானப் பேச்சுக்கு முன்னதாக சண்டை நிறுத்தப்பட வேண்டுமென நாம் கோருவதும் ஒரு புதிய நிபந்தனையல்ல. பேச்சுவார்த்தைகளுக்கு முன்பாக ஒரு நல்லெண்ண சூழ்நிலையையும் சமாதான புறநிலையையும் உருவாக்கும் நோக்குடன் இரு தரப்பினரும் சகலவிதமான போர் நடவடிக்கைகளையும் நிறுத்தவேண்டும் என நாம் நீண்டகாலமாக தொடர்ச்சியாக வாதாடி வந்துள்ளோம்.

இந்த நோக்கத்துடனேயே எமது விடுதலை இயக்கம் கடந்த ஆண்டு நத்தார் பண்டிகையுடன் ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்து மாதாந்த அடிபடையில் அதனை நீடித்து வருவதுடன் ஸ்ரீலங்கா அரசையும் போர் நிறுத்தம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்து வருகிறது.

ஆகவே பேச்சுக்கு முன்னதாக போர்நிறுத்தம் செய்யவேண்டும் என்பதும், பயங்கரவாத அமைப்பாக எம் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என நாம் கோருவதும் கடுமையான முன் நிபந்தனைகள் எனக்கருதுவது தவறாகும். கொடிய போரில் ஈடுபட்டு நிற்கும் இரு தரப்பினரும் சமாதான வழிமுறையைத் தழுவுவதற்கு ஏற்றமுறையில் நல்லெண்ணப் புறநிலையை உருவாக்கிக் கொடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளாகவே இவற்றைக் கருதுவது அவசியமானதாகும்.

### தற்காலிக போர்நிறுத்தம் அர்த்தமற்றது

ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுள்ள தற்காலிக போர்நிறுத்தம் நல்ல அறிகுறி. ஆயினும் இக் குறுகியகால போர்நிறுத்தம் புதுவருட விடுமுறைக்காக அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர,

(12ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## வீ.சின்னத்தம்பி (பாரதிநேசன்)

முன்னாள் இலங்கை மின்சாரசபை, பீக்கிங் வானொலி நிலையம், உதயன் பத்திரிகை, தினக்குரல் - சேவையாளரும், சீன கம்யூனிஸ்ட் சண்முகதாசன் கட்சியைச் சேர்ந்தவரும், தொழிற்சங்க வாதியும் -

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரன் சின்னத்தம்பி நேற்று (17.04.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பத்தினி, காலஞ்சென்ற வீரன் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மூ.கார்த்திகேசன் (கம்யூனிஸ்ட், மாஸ்ரர்) - வாலாம்பிகை தம்பதியினரின் மருமகனும், கண்ணம்மா செல்லத்துரை, வீ.கனகசபை, லட்சுமி இராஜதுரை, வீ.ராஜரெத்தினம் (I.S.A. மாவனல்ல) ஆகியோரின் ஆருயிர் சகோதரனும், இராணி ரத்தினதேவியின் அன்புக் கணவரும், டாக்டர் சீனோதயா குணரட்ணம், ஸ்ரீ உதயா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், டாக்டர் H.R.குணரட்ணத்தின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் விருப்பத்திற்கமைய அவரது கண்கள் தானம் செய்யப்பட்டதோடு பூதவுடல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு நேற்று (17.04.2001) மாலை ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*திருஞானசம்பந்தர் வீதி,*
*வட்டு.தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*
(86788)

தகவல்:
ராணி ரத்தினதேவி
(மனைவி)

## திருமதி மக்டலின் கிறிஸ்ரோபர் (செல்லம்மா)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மக்டலின் கிறிஸ்ரோபர் (செல்லம்மா) நேற்று (17.04.2001) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுவாம்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற அ.கிறிஸ்ரோபர் அவர்களின் அன்பு மனைவியும் கிறேஸ் மனுவேற்பிள்ளை (ஆஸ்திரேலியா), அல்பேட் அருள்ராஜா (அமெரிக்கா), யோய்ஸ் தங்கராஜா (ஆஸ்திரேலியா), வுளோறன்ஸ் ஸ்ரீஸ்கந்தராஜா (யாழ்.ப.நோ.கூ.சங்கம்), றோஸ் (யாழ்.போதனா வைத்தியசாலை சி.சே.கூ.சங்கம்), ஆனந்தராஜா (நோர்வே), ஞானேஸ் (ஆசிரியை, யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), தர்மேஸ், சௌந்தரராஜா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கலிஸ்ரஸ் மனுவேற்பிள்ளை, ஞானேஸ்வரி (அமெரிக்கா), தங்கராஜா (ஆஸ்திரேலியா), ஸ்ரீஸ்கந்தராஜா (ஆனைப்பகுதி இ.போ.ச. கோண்டாவில்), சறோ (நோர்வே), லதா ஆகியோரின் அன்பு மாமியாரும், தமயந்தி, லக்ஸ்மன், அருந்ததி, கஷந்தி, ஆன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யோசுவா, அர்ச்சுனா ஆகியோரின் ஆசைப்பூட்டியும் காலஞ்சென்றவர்களான S.J.அன்ரன், இசபெல்லா முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருட்செல்வி இமல்டா, மேரி, பேபி, அ.பி.முத்தையா (உபதேசியர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (18.04.2001) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (புதிய நேரம்), யாழ்.புனித புவனியார் ஆலயத்தில் நடைபெற்று புனித மரியாள் பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19, கோயில் வீதி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
(86787)

தகவல்:
றோஸ்-கிறிஸ்ரோபர்.
(மகள்)


# பிரத்தியேக வகுப்புகள்

**தரம் 09, O/L 2001 மற்றும் O/L 2002**

*கணிதம்:* திரு.கு.சிறீகணேஷ், *ஆங்கிலம்:* திரு.க.ராஜ்குமார்

இடம்: **BEACON**
கலாசாலை வீதி, திருநெல்வேலி
ஆரம்பம்: 20-04-2001 பி.ப.4.00 மணி

குழு ரீதியான வகுப்புகள் — மாணவர்கள் சிறுசிறு குழுக்களாகவும் வகுப்புகளை ஒழுங்கு செய்யலாம்.

(86773) அலுவலக நேரம்: தினசரி பி.ப 5.00 - 6.00 மணி


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



"சங்கீத ரத்தினம்"

**திரு.மா.சிதம்பரநாதன்** அவர்கள்

25/3/2001 அன்று பத்து வயதுச் சிறுவன் செல்வன ஸ்ரீ.உ.மாசுதனின் மிருதங்க அரங்கேற்றத்தின் போது பல கலாபிமானிகள் முன்னிலையில் மகா வித்துவான் திரு.N.வீரமணி ஐயா அவர்களால்

**"தண்ணுமை வேந்தன்"**

என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட எமது குருநாதர் "சங்கீதரத்தினம" திரு.மா.சிதம்பரநாதன் அவர்களைப் பல்லாண்டு காலம் கலை வளர்த்து நீடூழி வாழ மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(86770)

-அன்பு மாணவர்கள்.


# வர்த்தகர்களே! வாடிக்கையாளர்களே!

எம்மிடம் தரமான **STATE EXPRESS 555 Filter Kings** லண்டனில் தயாரிக்கப்பட்ட சர்வதேச அங்கீகாரம் பெற்ற சிகரெட் விற்பனைக்கு உண்டு.
மிகவும் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**S.V.MURUGESU,**
**154, Hospital Road,**
**Jaffna.**

**City Agency**
**158, 160, Stanley Road,**
**Jaffna.**

(C/16356)

# மூத்த பத்திரிகையாளர் சின்னத்தம்பியின் கண்கள் தானம்; பூதவுடல் மருத்துவபீடத்துக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.18

மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளரும், சமதர்மவாதியுமான வீ.சின்னத்தம்பி தமது 62ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

அவரது விருப்பப்படி இரண்டு கண்களும் தானம் செய்யப்பட்டதோடு, பூதவுடல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்கப்பட்டது.

இறுதிவரை தன்னை கம்யூனிஸ்ட் இயக்கவாதியாக இனங்காட்டிக் கொண்ட இவர் தொழிற்சங்க வாதியும் கலை இலக்கியவாதியும் ஆவார்.

தேசாபிமானி யுவசக்தி, தொழிலாளி ஆகிய கம்யூனிஸ்ட் இயக்க இதழ்களில் பணிபுரிந்த அமரர் சின்னத்தம்பி மக்கள் இலக்கியம் போன்ற மாத இதழ்கள் சிலவற்றின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

பீக்கிங் வானொலியில் மொழி பெயர்ப்பாளர், செய்தி ஆசிரியர், ஒலிபரப்பாளர் பதவிகளை வகித்து தமிழ் ஒலிபரப்பை சுமார் 16 வருடங்கள் சிறப்பாக நடத்தினார்.

உதயன் ஆசிரிய பீடத்தில் சுமார் ஏழு வருடங்கள் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் ஆங்கிலத்திலும் "ரிபியூன்" போன்ற பத்திரிகைகளில் எழுதினார்.



புதினப் பிரியன், புதினன், பாரதிநேசன் ஆகிய புனைபெயர்களில் இவர் வீரகேசரி, தினகரன், உதயன், சஞ்சவி, முரசொலி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகள், பேட்டிகள் என்பனவற்றை எழுதினார். இவர் ஒரு சிறந்த பத்தி எழுத்தாளருமாவார். அமரர் சின்னத்தம்பி ஒரு நாவலாசிரியரும் ஆவார்.

சில நாள்களாக உடல் நலம் குன்றியிருந்த இவர் நேற்றுக் காலை வட்டுக்கோட்டையிலுள்ள தமது இல்லத்தில் காலமானார். கரவெட்டியைப் பிறந்த ஊராகக் கொண்ட இவர் திரு இருதயக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். (அ)

# நீர்கொழும்பு நீதிமன்றம் முன்னால் கைதிகளின் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

## இன்று நடத்துவதற்கு ஏற்பாடு

கொழும்பு,ஏப்.18

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பிணையில் விடுவிக்கக் கோரி இன்று நீர்கொழும்பு நீதிமன்றம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

புதிய குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளையும் உறவினர்களையும் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி அவர்களின் பெற்றோரும் உறவினருமே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கான அனுமதியை பொலீஸார் வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி நீர்கொழும்பு சிறைச்சாலையில கைதிகள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றும் தொடர்ந்ததாகவும் இந்த விடயம குறித்து சிறைச்சாலை நிர்வாகம் நீதி அமைச்சுக்கும் பொலீஸ் தலைமையகத்துக்கும் அறிவித்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (க-4)

# லண்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்டையும் வழங்கப்பட்டது.

அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சு அவருடன் தொடர்புகொள்ள முயற்சி மேற்கொண்டது. ஆனால் அவர் குறித்த தகவலைப் பெறமுடியவில்லை.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் பறையனாளங்குளம் படைநிலைகளுக்குக் கிழக்கே கண்ணாட்டி என்ற இடத்திலுள்ள கண்காணிப்பு நிலைக்கு நூறு யார் தூரத்தில் இனந் தெரியாத குழு ஒன்றைப் படையினர் கண்டனர். படையினர் அந்தக் குழு மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள அந்தக் குழு சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்கியதுடன் கிரனேட்டையும் வீசியது.

அதன் பின்னர் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் காயமடைந்த நிலையில் பெண்ணொருவரை மீட்டனர். அந்தப் பெண் தமிழிலும், ஆங்கிலத்திலும் சத்தமிட்டு உதவி கோரினார்.

அவரை மீட்டு உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று பின்னர் ஹெலி மூலம் கொழும்புக்கு கொண்டுவரப் படையினர் உதவினர்.

அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் கமரா ஒன்று, படச்சுருள், நோட் புத்தகம், டயறி, கோல்ட் கலர் பென்ரன் உட்படப் பல பொருள்கள் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிக்கு இவர் சென்று வந்தமை தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் - என்று உள்ளது.

இதேவேளை -

மேரி கத்தரின் கடந்த வருடம் சிறந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளருக்கான விருதைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற முதலாவது வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மேரி கத்தரின் ஆவார். (க-3-4-9)


SUBRA - 14
2003 - கலை
புதிய பிரிவு
தமிழ் – நாக.தமிழிந்திரன்
LOG. – E.S.பவன்
HIN.CUL. – ஸ்ரீஸ்
DRA. – A.C.பிரான்சிஸ்
ECO. – ஜெயக்குமார்
GEO. – ஐங்கரன்
❊ (தனி)த்துவ ஆசிரியர் குழு
❊ இறுதித் திகதி: 23.04.2001
(86776)



மெலோடியஸ் மியூசிக்
தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, எமது வாடிக்கையாளர்களுக்கு
விசேட சலுகையாக
CD யில் இருந்து CD க்கு பாடல்களை ஒளிப்பதிவு செய்து கொள்ள CD உடன் 250/- ரூபா மட்டுமே!
❊ இச்சலுகை 14.04.2001 – 14.05.2001 வரைக்கும். தவறவிடாதீர்கள்!
❊ புதிய, பழைய சினிமாப் பாடல்கள்
❊ புதிய பக்திப்பாடல்கள் அனைத்தும் CD யில்
CD பதிவில் முன்னணியில் உள்ள சிறந்த ஸ்தாபனம்.
(C/16351)
மெலோடியஸ் மியூசிக் T.P.2891
இல. 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# 'என்ஜின் ஒயிலுக்கு' விலை அதிகரிப்பு இல்லை

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் விலை உயர்த்தப்பட்ட எரிபொருள்களின் பட்டியலில் "என்ஜின் ஒயில்" இடம்பெறவில்லை என்றும்-

ஒரு ரூபா 90 சதத்தால் விலை அதிகரிக்கப்பட்ட எரிபொருள் 'பேனர்ஸ் ஒயில்' என்றும் -

பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ வட்டாரங்கள் தெரிவித்தன.

விலை அதிகரிக்கப்பட்ட எரிபொருள்களில் 'என்ஜின் ஒயில்' அடங்கியுள்ளதாக வெளியான செய்திகள் தவறானவை என்றும் அவை தெரிவித்தன. (ஒ)

# போர் ஓய்வு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானச் சூழ்நிலையை உருவாக்குவதற்கோ அன்றிப் புலிகளின் போர் நிறுத்தத்திற்குப் பதில் நடவடிக்கையாகவோ இது அறிவிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் போர்நிறுத்தம் அர்த்தமுள்ளது, ஆக்கபூர்வமானது, அமைதியை இலட்சியமாகக் கொண்டது. ஸ்ரீலங்கா அரசும் தனது தற்காலிக போர்நிறுத்தத்தை காலவரையறையின்றி நீடித்து புலிகளின் போர்நிறுத்தத்துடன் தொடர்புபடுத்தி அதற்கு மதிப்பளிக்க வேண்டும். அப்பொழுதுதான் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கக்கூடிய அமைதியான புறநிலை ஏற்படும். அல்லாத பட்சத்தில் சிங்கள அரசின் இந்தத் தற்காலிக போர்நிறுத்தம் அர்த்தமற்றதும் பயனற்றதுமான ஒரு செயலாகவே இருக்கும் - என்றார்.

# பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும் வராத நிலையில் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பான விவரங்களை இந்த மாத முடிவுக்குள் அறிவிக்கக் கூடிய சாத்தியம் இல்லை.

ஜனாதிபதி இந்த வாரம் நாடு திரும்பியதும் பேச்சுக்களை எப்போது, எங்கே நடத்துவது தொடர்பாக ஆராயப்படவிருக்கின்றது.

பேச்சுக்களை ஆரம்பிக்க நோர்வே முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எனினும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் அளவுக்கு இன்னமும் இணக்கப்பாடு காணப்படவில்லை. எனவே பேச்சை ஆரம்பிப்பது தொடர்பான விவரங்களை இம்மாத இறுதிக்குள் வெளியிட முடியாது.

மோதல் தவிர்ப்பு மீறப்பட்டமை, புலிகளின் நிபந்தனை ஆகியவற்றால் பேச்சுக்களுக்கான முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனினும் விரைவில் இணக்கப்பாடு ஏற்படலாம் என்று நம்புகின்றோம் - என்றார். (க-3)


விக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு 4 8.30 - 2.00
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பிரிவு 5 இதோ... வெகு விரைவில்
(86752)



கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
வருமான பாய்ச்சல்
பொருளியல் II
யாழ்.வரதராஜன்
ஆரம்பம்: 19.04.2001
காலை 8.30 - 12.30வரை
(86758)



இன்று ஆரம்பம்!
G.C.E O/L, தரம் 10
வடமராட்சியில்
இலங்கையின் புகழ்பெற்ற
பிரபல முன்னணி ஆசிரியர்
விஞ்ஞானம்
GRAPHS குமரன்
எமது நிறுவனத்தில் மட்டுமே
மதியம் 12 மணிக்கு
சயன்ஸ் அக்கடமி
(86710) நெல்லியடி.


# யுத்த நிறுத்தத்தை நீடிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை

## இராணுவப் பேச்சாளர் தகவல்

புத்தாண்டை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து நீடிக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணரத்ன தெரிவித்தார்.

யுத்த நிறுத்தக் காலம் முடிவடைந்துள்ளதை அடுத்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் எங்கும் எப்போதும் நடைபெறலாம் என்று மேலும் தெரிவித்துள்ள அவர், யுத்த நிறுத்தத்தை நீடிக்குமாறு அரசாங்க உயர்மட்டம் தமக்கு அறிவித்தல் எதனையும் விடவில்லை என்பதால் வழமைபோன்று விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்துள்ளார். (க-4)

# மூன்றாவது தடவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அடைக்கப்பட்டார். பின்னர் அவர் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

எனினும் இந்தச் சம்பவம் குறித்து நீதிவான் சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளை நடத்துவார் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப நபருக்கு உதவியதாகக் கருதப்படும் வேலுச்சாமி என்ற கைதியும் விசாரிக்கப்படவுள்ளார்.

களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மார்க்கண்டு சுதன் கடந்த பெப்ரவரி மாதம் அங்கிருந்து திருகோணமலைக்குக் கொண்டுவரப்பட்டு யாழ்.சிறைச்சாலைக்கு கொண்டு செல்லும்போது யாழ்.பஸ் நிலையப் பகுதியில் சிறைக் காவலரைத் தாக்கிவிட்டு தப்பியோடினார்.

மறுநாள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மூலம் சரண் அடைந்த இவர், யாழ்.சிறைச்சாலையில் நீதிமன்ற உத்தரவுப்படி தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் கடந்த 9 ஆம் திகதி சிறைச்சாலையில் இருந்து மீண்டும் தப்பியோடிய இவர் கோப்பாய் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். (க-5-10)

# சொல்ஹெய்முடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வார இறுதியில் நாடு திரும்புவார்.

இதேவேளை அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் நோர்வேக்கு விஜயம் செய்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-4)

# பிரிட்டனின் தடைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனில் விடுதலைப் புலிகளின் அரசியற் செயற்பாடுகள் மீது நெருக்குவாரங்களை இறுக்கிய போதும், நாம் மாற்றுவழிகளையும், புதிய தந்திரோபாயங்களையும் கடைப்பிடித்து, சட்டத்தின் பிடிக்குள் சிக்குப்படாமல் செயற்பட்டு வருகின்றோம்.

இந்தத் தடைச்சட்டத்தால் எனது தனிப்பட்ட அரசியற் சுதந்திரங்களும் உரிமைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எமது விடுதலை இயக்கத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாக செயற்படுவதற்கும் இடையூறுகள் இருக்கின்றன. இந்தச் சட்டத்தின் விதிகளின்படி நான் எந்நேரமும் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு ஆளாகப்படலாம் -

என்றாலும் நான் லண்டனில் தான் வசித்து வருகின்றேன். இங்கிருந்து எனது அரசியல் வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகிறேன். இயக்கத்தின் சார்பில், சமாதான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறேன். மிகவும் குன்றிய உடல் நிலையும் மருத்துவ தேவைகளும் காரணமாக நான் வேறு நாடுகளில் குடியமர்வது முடியாத காரியம். ஆகவே ஒட்டு மொத்தத்தில் பார்க்கப்போனால் பிரிட்டனின் தடைச் சட்டமானது சமாதான முயற்சிகளுக்கும் குந்தகமாகவே அமைகிறது - என்று அன்ரன் பாலசிங்கம் தமது பேட்டியில் மேலும் விவரித்துள்ளார். (அ)


கண்ணீர் அஞ்சலி
செல்வி ஞானேஸ் கிறிஸ்ரோபர்
அவர்களின் அன்புத் தாயார்
மக்டலின் கிறிஸ்ரோபர்
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு கவலை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்துக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(C/16355) யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.



யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
GAQ 2002, B.A.(Part 1) B.A.(Final) 1 St in Com.
போன்ற கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன!
காலம்:- 21-04-2001 சனிக்கிழமை
✪ ஆங்கில மொழியியல், ஆங்கில இலக்கியம் உட்பட சகல பாட நெறிகளும் இங்கு போதிக்கப்படும்.
✪ நூலக வசதி உண்டு.
✪ A/L. மாணவர்களுக்கான ஆங்கில இலக்கிய பாடநெறியும் ஆரம்பமாகின்றது.
தொடர்புகளுக்கு:
பதிவாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு,
வட்டுக்கோட்டை.
பதிவாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு,
464, Hospital Rd., யாழ்ப்பாணம்.
(C/16352)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.